வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk

மலர் : 04

17.01.2023 செவ்வாய்க்கிழமை

இதழ் : 39

பக்கங்கள் : 12




## யாழ். மாவட்ட அரச அதிபராக சிவபாலசுந்தரன் நியமனம்!

### அமைச்சரவை அனுமதி வழங்கியது



கொழும்பு, ஜன. 17

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக அம்பலவாணர் சிவபாலசுந்தரனை நியமிக்க அமைச் சரவை நேற்று அனுமதி வழங்கியது.

இலங்கை நிருவாக சேவையின் (விசேட தர) மூத்த அதிகாரியான இவர், மட்டக்களப்பு, கொழும்பு, வவுனியா மாவட்டங்களில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றி, 2013 ஆம் ஆண்டு தொடக்கம் வடக்கு மாகாண சபையின் பேரவைச் செயலக செயலாளராக, பிரதிப் பிரதம செயலாளராக, 11

# பல்கலை. மாணவர் போராட்டம் கண்ணீர் குண்டு வீசி கலைப்பு!

கொழும்பு, ஜன. 17

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் மற்றும் சிவில் அமைப்புகள் நடத்திய போராட்டத்தை கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தண்ணீர்தாரை பிரயோகம் செய்தும் கலைத்தனர் பொலிஸார்.

கொழும்பு - கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்தே போராட்டம் இவ்வாறு கலைக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தால் காலி வீதி , கொள்ளுப்பிட்டியிலிருந்து பம்பலப்பிட்டி வரையான போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது.

இதன் போது பொலி ஸார் 11





# 13 அமுலானால் நாடு பிளவடையும்!

## மகாநாயக்கர்களுக்கு விமல் கடிதம்

### தமிழர்களின் பிரச்னைக்கு சமூக ஏழ்மை ஒழிப்பு சட்ட நடைமுறையே தீர்வாம்!

கொழும்பு, ஜன. 17

ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் நாடு குறுகிய காலத்துக்குள் பிளவடையும் - இவ்வாறு குறிப்பிட்டு மகாநாயக்கர்கள், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பியுள்ளார் உத்தர லங்கா சபாகயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ. 11

## 'பட்டா' மோதியதில் இளைஞன் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 17

பட்டா ரக வாகனம் சைக்கிளில் சென்றவரை மோதியதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

காங்கேசன்துறை வீதி - மாவிட்டபுரத்தில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 3. 30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. 11

## கூட்டணியிலிருந்து விலகியது சு. க. !

கொழும்பு, ஜன. 17

ஒன்பது கட்சிகளுடன் கூட்டிணைந்து அண்மையில் நிறுவப்பட்ட சுதந்திர மக்கள் கூட்டமைப்பிலிருந்து சிறீ லங்கா சுதந்திரக் கட்சி வெளியேறியுள்ளது. இதனால், இம்முறை ஹெலிகொப்டர் 11

## 20 இலட்சம் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசி வழங்க முடிவு

கொழும்பு, ஜன 17

சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் 20 இலட்சம் குடும்பங்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 2 மாதங்களுக்கு மாதாந்தம் தலா 10 கிலோ கிராம் அரிசி வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்த அமைச்சரவை பத்திரத்துக்கே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. 11

## காணி விடுவிப்பு தொடர்பில் எமக்கு நம்பிக்கையில்லை!

### சுமந்திரன் எம். பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் கலந்துரையாடலில் எமக்கு நம்பிக்கையில்லை. இது தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்படும் கருத்தாகவே இது உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலுக்கான கட்டுபணத்தை செலுத் திய பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 11



## கிட்டு உட்பட 10 மாவீரர்களின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல்!

முல்லைத்தீவு, ஜன. 17

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கிட்டு உட்பட அவருடன் வீரமரணமான 10 மாவீரர்களின் 30 ஆம் ஆண்டு நினைவேந்தல் முல்லைத்தீவில் நேற்று நடைபெற்றது.

விசுவமடு - தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக் குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு வள்ளிபுனத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் பங்கேற்று கிட்டு உள்ளிட்ட மாவீரர்களின் திருவுருவ படங்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (ஐ)

## இலங்கையின் எந்த கட்சியுடனும் இணைந்து செயல்பட சீனா தயார்!

### கொழும்பில் அந்நாட்டு பிரதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 17

இலங்கையின் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்து செயல்பட தயாராக இருக்கிறோம். வளரும் நாடுகள் சீனாவுடன் ஒத்துழைப்பதன் மூலம் பெரும் நன்மைகளை அடையலாம் என்று சீனாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் - சர்வதேச திணைக்கள 11



## விக்கியுடன் இணைந்தார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜன. 17

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் மீது கடும் அதிருப்தி வெளியிட்டு கூட்டணியிலிருந்து வெளியேறிய அனந்தி சசிதரன் மீண்டும் அந்தக் 11

# இப்படியும் நடக்கிறது...!

கடந்த சில நாட்களாக தமிழர் அரசியல் பரபரப்பாகக் காணப்பட்டது. தமிழரசு தனித்துப் போட்டி, பங்காளிக் கட்சிகள் கூட்டமைப்பை பலப்படுத்தப் போகிறோம் என்று கூறிக் கொண்டு மற்றைய தமிழ் தேசியக் கட்சிகளை இணைக்க எடுத்த முயற்சிகள் என்று இந்தப் பரபரப்புக்கள் காணப்பட்டன.

இப்போது ஒருவாறு அவையெல்லாம் முடிந்து நடக்கவிருக்கும் உள்ளூராட்சி தேர்தலில் என்ன நடக்கப்போகின்றது என்பது ஓரளவுக்கு வெளிச்சமாகியிருக்கின்றது.

உள்ளூராட்சி தேர்தல் நடக்குமா என்பது வேறுவிடயம். ஆனால், அது எப்போது நடந்தாலும் இப்போது கையளிக்கப்படும் வேட்புமனுக்களின் பேரிலேயே தேர்தல் நடக்கும் என்பதால், அவ்வாறு வேட்புமனு கொடுத்தபின்னர் இந்த அணிகளுக்கு இடையே தேர்தல் முடியும்வரை மாற்றம் ஏற்படுவதற்கு சாத்தியம் இல்லை.

இந்த மாற்றங்கள் எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஒரு மூத்த அரசியல் ஆய்வாளர் ஒருவருடன் பொங்கலன்று பேசினேன்.

அவர் எடுத்த எடுப்பில் சொன்னார், 'தமிழ் தேசிய வாக்குகள் நான்காக சிதறும், அதனைத்தவிர வேறு எதுவும் நடக்கப்போவதில்லை' என்று.

உதாரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தை எடுத்தால், கடந்த பல தேர்தல்களில் சுமார் இரண்டு லட்சம் முதல் இரண்டு இலட்சத்து இருபத்தி ஐயாயிரம் வரையான வாக்குகளே நமது தமிழ் தேசியக் கட்சிகளுக்கு மொத்தமாக கிடைத்து வருகின்றன.

அதில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பு ஒரு இலட்சம் வாக்குகளில் சற்று கூடுதலாக பெற்றது. ஏனைய வாக்குகளை மற்றைய இரண்டு அணிகளும் பங்கிட்டுக்கொண்டன.

இப்போது பாராளுமன்ற தேர்தல் ஒன்று வந்தால் எப்படி அவை பிரிந்து போகும் என்பதை சொல்லிவிடமுடியாது.

ஆனால், உள்ளூராட்சி தேர்தல்கள் சற்று வித்தியாசமானவை. அவற்றில் உள்ளூர் பிரமுகர்களே வேட்பாளர்களாகக் களம் இறங்குவதால், அவர்களின் தனிப்பட்ட செல்வாக்கும் கணிசமான பங்கை வகிக்கும்.

கடந்த இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டு நடந்த உள்ளூராட்சி தேர்தலில் அப்போது கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருந்த ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிட்டிருந்தது. ஆனால், கூட்டணியின் வாக்குவங்கி என்பது நமக்கு தெரிந்ததுதான். அது தனித்துப் போட்டியிட்டபோது ஒரு சிலநூறு வாக்குகளையே பெற்றிருந்தது. ஆனால், அவர்களின் சின்னத்தில் போட்டியிட்ட ஈ. பி. ஆர். எல். எவ். யாழ். மாவட்டத்தில் மாத்திரம் பதினாறாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்றிருந்தது.

இரண்டாயிரத்து பதினைந்து தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தனித்து களம் இறங்கி பெற்ற வாக்குகள் பதினாறாயிரம் என்றால், இன்றும் கூட்டமைப்பில் இருந்துகொண்டிருக்கின்ற - இருபதுக்கும் மேற்பட்ட உள்ளூராட்சி உறுப்பினர்களை இப்போதும் கொண்டிருக்கும் ரெலோ தனக்கென்று அதைவிட அதிகமான வாக்குகளை பெறும் என்பது எதிர்பார்க்கக்கூடியதே.

அதேபோல புளொட்டும் மானிப்பாய், காங்கேசன்துறை தொகுதிகளில் தனக்கென்று கணிசமான வாக்குவங்கியுடன் இருக்கிறது. - அது புளொட் கட்சிக்கானதல்ல என்றாலும் சித்தார்த்தன் என்ற தனி மனிதனுக்கானது. அவரும் அவர் பங்குக்கு அதைவிட சற்று அதிகமாகவும் நிச்சயம் பெறுவார். ஜனநாயகப் போராளிகள், சிவாஜிலிங்கம் அணியினர் என்று அந்த அணி ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியை பதிவுசெய்யும்.

அதைவிட மற்றுமொரு விடயமும் மிக ஆரவாரமின்றி நடந்து முடிந்திருக்கின்றது. கூட்டமைப்பில் புதிய கட்சிகளை இணைப்பதற்காக நடந்த பேச்சுகளிலிருந்து விக்னேஸ்வரன் வெளியேறிய பின்னர், மறுநாள் காலை அவரின் வீட்டுக்கு சென்ற யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர் சிலர் அவரை அந்தக் கூட்டில் இணைந்துகொள்ளுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அவர் அதனை மறுத்திருந்தாலும் - அவர்கள் அவ்வாறு கோரிக்கை விடுத்தது - அந்த ஒற்றுமை முயற்சியை அவர்கள் விரும்புவதாகவே அர்த்தம்கொள்ள வைத்திருக்கின்றது.

அவர்களின் கோரிக்கையை விக்னேஸ்வரன் நிராகரித்திருந்தாலும் அந்தப் புதிய அணிக்கு அவர்கள் நேரடியாக ஆதரவு வழங்காவிட்டாலும் மறைமுகமாக அவர்களும் இந்த அணிக்கு ஆதரவானவர்கள் என்ற தோற்றப்பாட்டை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

தேர்தல் என்பது வாக்குக்களை கூட்டிக் கழித்து பார்த்து அதற்கு ஏற்ப காய்நகர்த்தி வெற்றி பெறுவதுதான். ஆனால், அந்த வெற்றி தமிழ் மக்களுக்கு ஏதாவது வகையில் நன்மையை ஏற்படுத்தவேண்டும்.

ஆகக்குறைந்தது, தேர்தல் முடிவுகள் புதிய தலைமைகளை - உருவாக்கினால்கூட அது தமிழ் மக்களுக்கு ஆறுதலானதுதான்.!

இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும்போது லண்டனிலிருந்து ஒருவரின் மின் அஞ்சல் ஒன்று வந்திருந்தது. தன்னை தமிழரசின் மத்திய குழு உறுப்பினர் என்று கூறியிருந்த அவர் கடும் வார்த்தைகளை கொட்டித் தீர்த்திருந்தார். முதலில் தமிழரசின் மத்திய குழு உறுப்பினர் தொடர்ந்து மூன்று கூட்டங்களில் சமுகமளிக்கவில்லை என்றால் அவர் அந்த உறுப்புரிமையை இழந்துவிடுவார் என்பது அவருக்குத் தெரிந்திருக்குமோ தெரியவில்லை. இருந்தாலும் அவரின் கடிதம் பற்றி நாளை பார்ப்போம்.

**- ஊர்க்குருவி**

# தமிழ் அரசுக் கட்சி நேற்று கட்டுப்பணம் செலுத்தியது

யாழ்ப்பாணம், ஜன. 17

இலங்கைத் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலுக்கான கட்டுப்பணத்தை செலுத்தியது.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்திலுள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் த. சத்தியலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோரால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.



யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் இதன்போது கட்டுப்பணம் செலுத்தப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (அ)

# சுயேச்சை வேட்பாளரை களமிறக்கும் தலைமன்னார் மேற்கு கிராம மக்கள்!

மன்னார், ஜன. 17

தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த மக்கள் சுயேச்சையாக வேட்பாளர் ஒருவரை தேர்தலில் களமிறக்குவதற்காக நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

கட்சிகளுக்குள் ஒன்றுமையில்லாத நிலையில், இனியும் அவர்களை நம்பிப் பயன் இல்லை என்ற காரணத்தினால் மன்னார் மாவட்டத்தில் உள்ள தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அதிரடியாக முக்கிய தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளனர்.

இதற்கமைய தங்களது ஊர் மக்கள் சார்பாக சுயேச்சை வேட்பாளர் ஒருவரைக் களமிக்க தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த ஊர் மக்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்நிலையில் தலைமன்னார் மேற்கைச் சேர்ந்த ஊர் மக்கள் சார்பில் நேற்று திங்கட்கிழமை சுயேச்சையாக களமிறங்குவதற்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

(அ)

# குழு மோதலில் எஸ். ரி. எவ் சிப்பாய் உட்பட இருவர் பலி!

கொழும்பு, ஜன. 17

தம்பதெனிய - உதியாவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் இருவர் கொலை செய்யப்பட்டனர்.

கூரிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டே இருவரும் கொலை செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் தம்பதெனிய பகுதியைச் சேர்ந்த 39 மற்றும் 41 வயதான இருவரே உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சார்ஜன்ட் ஒருவரும் அடங்குகின்றார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கான பொலிஸ் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்ட மகனை தேடிய இன்னொரு தாயும் மரணம்!

யாழ்ப்பாணம், ஜன. 17

போர் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை தேடிவந்த தாயார் ஒருவர் அவரை காணாமலேயே உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் - ஈச்சமோட்டையை சேர்ந்த மரியானந்தம் அல்லேலூயா மரியம்மா என்பவரே இவ்வாறு காலமானார்.

இவரின் மகனான மேரி ஜேம்ஸ் 1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தார். கடந்த 27 ஆண்டுகளாக மகனை தேடிவந்த நிலையில் அவரை காணாமலேயே - அவருக்கு என்ன நடந்தது என்பது தெரியாமலேயே தாயார் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மீண்டும் 'அரகலய'!
## போராட்டத்துக்கு அழைப்பு

கொழும்பு, ஜன. 17

கொழும்பில் மீண்டும் அரகலய போராட்டம் நடத்தப்படவுள்ளதாக பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பல்வேறு தொழிற்சங்கள் மற்றும் சமுகக்குழுக்களுடன் இணைந்து இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாங்கிக் கொள்ள முடியாத வாழ்க்கைச் செலவினங்கள், அரசாங்கத்தின் அடக்குமுறைகள் என்பவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பைச் சுற்றிவளைத்து இந்த போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு பொதுக்கள் கொழும்புக்கு வந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது. (அ)

# கிளிநொச்சியில் தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் வெளியீடு!



கிளிநொச்சி, ஜன. 17

ஈழ எழுத்தாளர் தீபச்செல்வனின் பயங்கரவாதி நாவல் வெளியீடு நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேச சபையின் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் யாழ் பல்கலைக்கழக ஊடகத்துறை பேராசிரியர் கலாநிதி சி. ரகுராம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் முதல் பிரதியை நிகழ்வின் பிரதம விருந்தினர் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வெளியிட, கிளிநொச்சி இளையோரின் எதிர்காலம் இன்றே அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை ஆனந்தவடிவேல் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் முன்னாள் வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜா வாழ்த்துரை வழங்கினார். எழுத்தாளர் போராளி நிகழ்வில் அறிமுக உரையை செந்தூரனும், வெளியீட்டுரையை பிரதேச சபை உறுப்பினர் அ. சத்தியானந்தனும் வழங்கினர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
17.01.2023 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், தை 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# ரணிலின் 13?

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க யாழில் தெரிவித்திருக்கின்றார். தமிழ் கட்சிகள் அரசியல் தீர்வை காணும் முயற்சிகளுக்கு காலக்கெடு விதித்திருக்கும் நிலையில்தான் ரணில் இவ்வாறானதோர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார். ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புதிய அரசியல் யாப்பு தொடர்பிலேயே ரணிலுடன் தொடர்புகளை பேணியிருந்தது.

அரசியலமைப்பிலுள்ள விடயங்களை அமல்படுத்துமாறு கோருவதிலிருந்து அடுத்த கட்டத்தை நோக்கிச் செல்வதே சரியானதென்று அன்றைய சூழலில் பலரும் சுட்டிக்காட்டியிருந்தனர். அன்றைய சூழல் அதற்கு முற்றிலும் சாதகமாக இருந்தது. ஆனாலும், சம்பந்தன் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் விடாப்பிடியாக இருந்தார். 13ஆவது திருத்தச் சட்டத்தைத் தாண்டி அதிக தூரம் சென்றுவிட்டோமென்றே சம்பந்தன் கிளிப்பிள்ளைபோல் கூறிக் கொண்டிருந்தார். ஆனால், சம்பந்தன் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும்போது இந்தியாவோ, 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பிலேயே அழுத்திக் கூறிக் கொண்டிருந்தது. ஆனால், சம்பந்தனோ தாங்கள் அதனைத் தாண்டி அதிக தூரம் சென்றுவிட்டதாகக் கனவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். இப்போதும்கூட, தமிழ்த் தேசிய அரசியல் பேசும் அரசியல்வாதிகள் சிலர் அவ்வாறான கற்பனையில்தான் இருக்கின்றனர்.

இதேவேளை, சம்பந்தன் இவ்வாறு 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கூறிக்கொண்டிருக்கும்போதே மறுபுறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையில் அரசியல் தீர்வு விடயமென்று வருகின்றபோது 13ஆவது திருத்தச்சட்டம் - மாகாண சபை தேர்தல் தொடர்பிலேயே வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனாலும், சம்பந்தன் புதிய அரசியல் யாப்பை எட்டிப் பிடித்து விடாலாமென்னும் கனவில், ரணில் விக்கிரமசிங்கவின் கரங்களை இறுக்கமாகப் பற்றியிருநதார். ஆனால், அரசியல் யாப்பு முயற்சிகள் படுமோசமாக தோல்வியடைந்தன. கூடவே, ரணிலும் படுமோசமான தோல்வியை சந்தித்தார். ரணிலின் தோல்விக்கான காரணங்களில் புதிய அரசியல் யாப்பு முயற்சியும் ஒன்றானது. இந்த அனுபவங்களிலிருந்தும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் அழுத்தங்களின் காரணமாகவே, அரசியலமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்துமாறு கோர வேண்டிய நிலைக்கு சம்பந்தன் இம்முறை கீழறங்கியிருந்தார்.

13 விடயத்தில் எந்தளவு ரணில் விக்கிரமசிங்க உறுதியாக இருக்கின்றார்?, ரணிலின் முயற்சிகளுக்கு எந்தளவுக்கு ஏனையவர்கள் ஒத்துழைப்பு வழங்குவார்கள்? இப்படியான கேள்விகள் இருந்தபோதிலும்கூட, தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வைக் காணும் முயற்சியில் தென்னிலங்கையின் ஈடுபாட்டை நிரூபிக்க வேண்டுமாயின், ஒரு சில விடயங்களை முன்னெடுக்க வேண்டிய நிர்ப்பந்தமும் இல்லாமலில்லை. ஆனாலும் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை உறுதிப்படுத்தினால்தான், இலங்கைக்கு உதவுவோம் என்று எந்தவொரு நிபந்தனையுமில்லை. ஆனால், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்கும் கடப்பாட்டை இலங்கை நிறைவேற்ற வேண்டுமென்னும் சர்வதேச பார்வையுண்டு. அந்த அடிபபடையிலேயே இலங்கையின் மீதான மேற்குலக அழுத்தம் தொடர்கின்றது. அது இனியும் தொடரும்.

மனித உரிமை விவகாரத்துக்கு கொழும்பு பதிலளிக்க மறுத்தால் - அத்துடன், மனித உரிமைகளுக்கான பொறுப்புக் கூறலை தட்டிக் கழிப்பவர்களிடம் நாடு மீளவும் செல்லுமாயின், கொழும்பின் மீதான மேற்குலக அழுத்தங்கள் கடுமையாகும் என்னும் செய்தியையும் மேற்குலகு நாசூக்காக சொல்ல முற்படுகின்றது. கடந்த வாரம், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த மற்றும் கோட்டாபய ராஜபக்ஷக்கள்மீது, கனடிய அரசாங்கம் தடை விதித்திருந்ததை இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் புரிந்துகொள்ள வேண்டும். ரணிலை பொறுத்தவரையில் இந்தியாவை திருப்திப்படுத்தினால் மற்றையவர்களை திருப்திப்படுத்துவது இலகென்று கருதுவதற்கான வாய்ப்புண்டு. ஏனெனில், ஒரே நேரத்தில் அனைவருடனும் முரண்டுபிடித்துக் கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதென்பது, முயலில் கொம்பை தேடுவதற்கு ஒப்பானது. இதனை ரணில் நன்கறிவார். எனவே, 13ஆவது தான் விடயங்களை கையாள்வதற்கு உள்ள தந்திரோபாய துருப்புச் சீட்டு.

# தமிழ் மக்கள் கூட்டணியில் இணைந்தார் மணிவண்ணன்!

*யாழ்ப்பாணம், ஜன. 17*

தமிழ் மக்கள் கூட்டணியில் 30இற்கும் மேற்பட்ட ஆதரவாளர்களுடன் உத்தியோகபூர்வமாக இணைந்தார் யாழ். மாநகர முன்னாள் மாநகர சபை முதல்வர் வி. மணிவண்ணன்.

தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்றது.

மணிவண்ணனை இணைப்பதற்கும் அவரை மத்திய குழுவில் உறுப்பினராக உள்ளீர்ப்பதற்கும் தமிழ் மக்கள் கூட்டணியின் மத்திய குழு அனுமதி வழங்கியது. இதைத் தொடர்ந்து வி. மணிவண்ணன் மத்திய குழு உறுப்பினராக உள்ளீர்க்கப்பட்டார்.

அத்துடன், அவரின் ஆதரவாளர்கள் தமிழ் மக்கள் கூட்டணியின் தொண்டர்களாகவும் உள்வாங்கப்பட்டனர். (ஐ)

# இந்தியாவின் காசி தீர்த்தம் அராலி குளத்தில் சேர்ப்பு!

*யாழ்ப்பாணம், ஜன. 17*

இந்துக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான பொங்கல் பண்டிகை நேற்றுமுன்தினம் உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் கொண்டாடினார்கள். பொங்கலுக்கு அடுத்த நாளான நேற்று, உழவுத் தொழிலுக்கு அளப்பரிய பணியாற்றிய பசுக்களுக்கும் காளைகளுக்கும் பட்டிப் பொங்கல் கொண்டாடப்பட்டது.

வட்டுக்கோட்டை - அராலி உப்புவயல் குளத்தருகில் பட்டிப் பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட்டது.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டார்.



சிதம்பரமோகனால் இந்தியாவின் காசியில் இருந்து எடுத்துவரப்பட்ட புனித காசி தீர்த்தமானது யாழ். இந்திய துணைத் தூதுவரால் குளத்தில் கலக்கப்பட்டது. பின்னர் பட்டிப் பொங்கல் நிகழ்வு நடைபெற்றது.

இந் நிகழ்வில் சிதம்பரமோகன், யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர், நாகவிகாரை விகாராதிபதி, வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# நாவலர் 200 ஆண்டு நிறைவும் புத்தகக் கண்காட்சியும்

*யாழ்ப்பாணம், ஜன. 1*

ஆறுமுக நாவலரின் 200ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புத்தகக் கண்காட்சியும் நாளை புதன்கிழமை காலை 8.00 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கலாநிதி தமிழ்மணி அகளங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் ப. உமாமகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில், ஆறுமுக நாவலரின் திருவுருவ சிலை இராச வீதி சந்தியிலிருந்து யாழ். தேசிய கல்வியியல் கல்லூரிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். தொடர்ந்து, கல்லூரியின் பிரதான மண்டபத்தில் மாணவ ஆசிரியர்களின் கலைநிகழ்வுகள் நடைபெறும். அத்துடன், ஆறுமுக நாவலரின் 200ஆவது ஆண்டை ஒட்டி நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும். (ஐ)

# வடக்கு மாகாண தைப்பொங்கல் விழா!


*வவுனியா, ஜன. 17*

வட மாகாண தைப் பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா கிடாச்சூரி கண்ணகி முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் வவுனியா பிரதேச செயலகம் என்பன இணைந்து நடத்தும் இந்தப் பொங்கல் விழாவுக்கு பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் ஸ்ரீமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில், வட மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ. வரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும் யாழ். இந்திய துணைத்தூதரக தலைமை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ் சிறப்பு விருந்தினராகவும் கௌரவ விருந்தினர்களாக வெங்கலச் செட்டிக்குளம் பி. சி. ஆர். பபா பஜோன், வவுனியா பிரதேச செயலாளர் நா. கமலதாசன், வவுனியா தெற்கு பிரதேச செயலர் பி. எம். ஏ. கே. குமார, வவுனியா வடக்கு பிரதேச செயலர் இ. பிரதாபன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஜனவரி - 17 செவ்வாய்க்கிழமை
சுபகிருது வருடம் - தை 03
நல்ல நேரம் : 6.00 - 7.00
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
செயல்களில் சங்கடம் ஏற்பட்டாலும், நேற்றுவரை இழுபறியாக இருந்த ஒரு முயற்சி லாபமாகும். தம்பதிக்குள் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். நண்பர்கள் ஒத்துழைப்புடன் உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**இடபம்**
மறைமுக எதிரிகளால் ஏற்பட்ட பிரச்னைகள் விலகும். உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். நண்பர்கள் துணையுடன் ஒரு பிரச்னைக்கு முடிவு கட்டுவீர்கள். புதிய முயற்சி வெற்றியாகும்.

**மிதுனம்**
மனதில் புதிய உற்சாகம் தோன்றும். குடும்ப சொத்து விவகாரம் பற்றி உறவினரிடம் ஆலோசிப்பீர். அமைதியாக செயல்பட்டு நினைத்ததை சாதித்துக் கொள்வீர்கள். நிதிநிலை உயரும்.

**கடகம்**
திட்டமிட்டிருந்த செயல்களில் மாற்றம் செய்வீர்கள். வழக்கு சாதகமாகும். திருப்பு முனையான நாள். குடும்பத்தினர் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் உண்டு.

**சிம்மம்**
வேகமாக செயல்பட்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் இருந்த சிக்கல்களை சரி செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும்.

**கன்னி**
குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் விலகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நிதிநிலை குறித்த எண்ணம் மேலோங்கும். உங்கள் பேச்சு சாதுர்யத்தால் ஒரு செயல் லாபமாகும்.

**துலாம்**
உங்கள் அணுகுமுறையால் நீண்ட நாள் பிரச்னை இன்று தீர்வுக்கு வரும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். நீங்கள் விரும்பிய வகையில் செயல்பட்டு மகிழ்வீர்கள். வருவாயில் ஏற்பட்ட தடைகள் விலகும்.

**விருட்சிகம்**
வியாபாரத்தில் ஏற்பட்ட சிக்கல்களை சரி செய்வீர்கள். அலைச்சலும் செலவும் அதிகரிக்கும். வருமானத்தில் தடைகள் உண்டாகும். புதிய முயற்சிகள் எதுவும் இன்று வேண்டாம்.

**தனுசு**
நீங்கள் எதிர்பார்த்த வருவாய் இன்று உங்களைத் தேடி வரும். ஆதாயமான நாள். உங்கள் செயல்களில் இன்று விவேகம் இருக்கும். நினைத்ததை சாதித்து மகிழ்வீர்கள்.

**மகரம்**
வியாபாரத்தை விருத்தி செய்வதற்குரிய வழிகளைக் கண்டறிவீர்கள். முயற்சி வெற்றியாகும் முதலீடுகள் செய்திருந்தவற்றில் ஆதாயமான நிலை ஏற்படும். வருவாய் அதிகரிக்கும்.

**கும்பம்**
தந்தை வழி உறவுகள் ஆதரவுடன் உங்கள் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் எண்ணங்களில் ஒன்று நிறைவேறும். விரும்பியதை அடைந்து மகிழ்வீர்கள். சங்கடங்கள் விலகும்.

**மீனம்**
வெளியூர் பயணங்களால் சங்கடங்கள் உண்டானாலும் உங்கள் விருப்பம் நிறைவேறும். உங்களிடம் சோர்வு தென்படும். மனம் அமைதியை நாடும். உடல் நலனில் அக்கறை தேவைப்படும்.

# தமிழக அரசை ஆளாளுக்கு கூறுபோட்டு நடத்துகின்றனர்!

## எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஜன. 17

"முதல்வர் மு. க. ஸ்டாலின், அவரின் மகன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என்று ஆளாளுக்கு தமிழக அரசை கூறுபோட்டுக்கொண்டு அரசை நடத்துகின்றனர்", என்று அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

எம்ஜிஆரின் 106 பிறந்த நாளை முன்னிட்டு அவர் தொண்டர்களுக்கு எழுதியுள்ள மடலில் கூறியிருப்பதாவது,

"1972-ஆம் ஆண்டில் மத்திய அரசு அரசு ஊழியர்களுக்கு விலைவாசிக்கு ஏற்றவாறு பஞ்சப்படி கொடுக்கப்படும் என்று அறிவித்து அரசாணையை வெளியிட்டது. அப்போது தமிழ்நாடு முதலமைச்சராக இருந்த கருணாநிதி இதை மாநில அரசு ஊழியர்களுக்கு அமுல்படுத்த மறுத்தார். பிறகு ஆட்சிக்கு வந்த எம்.ஜி.ஆர். மாநில அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு சமமான பஞ்சப்படி கொடுத்ததோடு மட்டுமல்லாமல், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கொடுக்கும் பொருட்டு, ஊதியக் குழு ஒன்றை அமைத்து, அதை அமுல்படுத்திக் காட்டி, அரசு ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்தவர் எம்.ஜி.ஆர்.

அவருடைய காலத்தில் பாமர மக்களுக்கு இன்னல்கள் ஏற்படாத வண்ணம் வீட்டு வரி, குடிநீர் வரி, பேருந்து கட்டணம் ஆகியவற்றை உயர்த்தாமல், மக்களின் வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்கினார். இன்றைய திமுக ஸ்டாலின் அரசு தேர்தல் நேரத்தில் தமிழ்நாட்டு மக்களிடம் பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டு மக்களை ஏமாற்றி, கூட்டணிக் கட்சிகளின் தயவால் ஆட்சிக்கு வந்தது.

இன்றைய, நிர்வாக திறனற்ற ஆட்சி நடத்தி வரும் திமுகவின் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின், அவரது மகன் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் என்று ஆளாளுக்கு தமிழக அரசை கூறு போட்டுக்கொண்டு அரசை நடத்துகின்றனர். எனவே, இந்த மக்கள் விரோத இந்த திமுக அரசை வீட்டுக்கு அனுப்ப, எம்.ஜி.ஆர். பிறந்த இந்நாளில் நாம் அனைவரும்

வீர சபதம் ஏற்று, கண்துஞ்சாது களப்பணி ஆற்றி, மீண்டும் கழகத்தின் நல்லாட்சியை மக்களுக்கு வழங்கிடுவோம்." இவ்வாறு அதில் கூறியுள்ளார். (ஐ)

# ஜெயலலிதாவுக்கு பின்னர் அ. தி. மு. க. பா. ஜ. கவின் உப அமைப்பாகிவிட்டது!

## திருமாவளவன் விமர்சனம்

சென்னை, ஜன. 17

ஜெயலலிதாவின் இறப்புக்கு பிறகு அ. தி. மு. க. கட்சி, பா. ஜ. கவின் துணை அமைப்பாக மாறிவிட்டதாக விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரான திருமாவளவன் விமர்சித்துள்ளார்.

மேலும், "தை திருநாளே தமிழர்களுக்கான புத்தாண்டு நாள், கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது தை திருநாளை புத்தாண்டு நாளாக சட்டம் கொண்டு வந்தார். பின்னர் ஜெயலலிதா

அதை இரத்து செய்து சித்திரை முதல் நாளை புத்தாண்டாக அறிவித்ததாக கூறினார்.

தற்போதுள்ள முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தை முதல் நாளை தமிழர் புத்தாண்டாக அறிவிக்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளார். தாய் என்றாலும் அம்மா என்றாலும் ஒன்றுதான் அம்மா என்பதை அதிகாரபூர்வமாக

அழைக்கிறோம். தமிழகம் என்றாலும் தமிழ்நாடு என்றாலும் ஒன்றுதான். இதில் வேறுபாட்டை கொண்டு வருவது குதற்கவாதம். இரண்டுக்கும் இடையில் வேறுபாட்டை ஏற்படுத்தும் வகையில் ஆளுநர் தொடங்கி வைத்திருப்பது சொல் விளையாட்டல்ல கருத்தியல் முரண்.

ஆளுநரின் போக்கு தமிழ் இனத்துக்கு விரோதமானது. திராவிட கருத்தியலுக்கு எதிரானது சமூக நீதி அரசியலுக்கு எதிரானது. ஆர். என். ரவியை தமிழ்நாட்டின் ஆளுநராக நியமித்தபோதே அவரை நியமிக்க வேண்டாம் அரசியல் குழப்பத்தை, பதற்றத்தை ஏற்படுத்துவார் என எச்சரித்தேன் அதை அவர் தற்போது உண்மையாக்கி கொண்டிருக்கிறார் - என்றார். (ஐ)

# பாரதிய கலாசாரத்தை திருக்குறளே வடிவமைத்தது!

சென்னை, ஜன. 17

திருக்குறள் பாரதிய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் வடிவமைத்து வளர்த்தாக ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு ஆளுநர் ஆர். என். ரவி திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தினார்.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகை தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், பாரதிய முனிவர்களுள் உச்சத்தில் இருப்பவரும், தமிழர்கள் வாழும் புண்ணிய பூமியில் பிறந்தவரும் தர்மம், நீதி சாஸ்திரங்களை ஒருங்கே பெற்ற தனிச்சிறப்புமிக்க திருக்குறளை வழங்கியவருமான திருவள்ளுவருக்கு அவரது தினத்தில் நெஞ்சார்ந்த மலர் மரியாதையை செலுத்தினார்.

திருக்குறள் பாரதிய கலாசாரத்தையும் நாகரிகத்தையும் வடிவமைத்து வளர்த்தது. அதன் ஆழமான போதனைகள், இன்று (நேற்று) சூஜி-20 தலைவராக எழுச்சி பெறும் பாரதத்துக்கு மிகவும் பொருத்தமானவை.", என்று கூறியுள்ளார். (ஐ)

# வள்ளுவர் வழிநின்று சமத்துவ சமுதாயம் காண உழைப்போம்!

## முதலமைச்சர் ஸ்டாலின்



சென்னை, ஜன. 17

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவர் வழிநின்று சமத்துவச் சமுதாயம் காண உழைப்போம் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இது குறித்து தனது ருவிற்றர் பக்கத்தில்," திருவள்ளுவர் நாளில் வள்ளுவர் கோட்டத்தில் நடந்த நிகழ்ச்சியில் இரணியன் நா.கு. பொன்னுசாமிக்கு அய்யன் திருவள்ளுவர் விருதையும், கவிஞர் கலி. பூங்குன்றனுக்கு தந்தை பெரியார் விருதையும், எஸ்.வி. ராஜதுரைக்கு அண்ணல் அம்பேத்கர் விருதையும், நாமக்கல் வேல்சாமிக்கு தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருதையும், கவிஞர் மு. மேத்தாவிற்கு முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருதையும், முனைவர் இரா. மதிவாணனுக்கு தேவநேயப் பாவாணர் விருதையும் வழங்கி வாழ்த்தியதோடு, வள்ளலார் பல்லுயிர்க் காப்பகங்களுக்கான நிதி உதவியையும் அளித்தேன். பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற வள்ளுவ வழிநின்று சமத்துவச் சமுதாயம் காண உழைப்போம்." இவ்வாறு அதில் கூறியுள்ளார். (ஐ)

# ஜெய்சங்கரின் வருகை இலங்கைக்கு உதவுவதை நோக்கமாக கொண்டது!

## அரச வட்டாரங்களில் இருந்து தகவல்

கொழும்பு, ஜன. 17

**இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ் ஜெய்சங்கரின் இலங்கை விஜயம் பொருளாதார நெருக்கடியில் இலங்கைக்கு உதவுவதை அடிப்படையாக கொண்டு அமைந்திருக்கும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

எரிசக்தி பாதுகாப்பு உணவுப் பாதுகாப்பு நாணய பரிவர்த்தனை மற்றும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு போன்றவை குறித்தும் பேச்சு வார்த்தைகள் இடம்பெறுகின்றன என அரசாங்க வட்டாரங்கள் கூறியுள்ளன.

இந்திய வெளிவிவகார அமைச்சரின் இரண்டு நாள் விஜயத்தின்போது சில அறிவிப்புகள் வெளியாகலாம் எனவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வருடம் இந்தியா வழங்கிய ஆதரவுகளின் அடிப்படையில் இலங்கையின் வேண்டுகோளுக்கு இந்தியா சாதகமான பதில்களை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என அரசாங்க வட்டாரங்கள் கூறின.

மேலும் இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்ப்பு காணப்படுகின்றது.

திருகோணாமலை அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகலாம் என விடய மறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியில் உதவுவது இந்தியாவின் முக்கிய கரிசனைக்குரிய விடயமாக காணப்படுவதால் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் ஜெய்சங்கர் மேற்கொள்கின்ற இந்த விடயத்தின்போது இரு தரப்பு உறவுகள் குறித்து முழுமையான மீள் ஆய்வு இடம்பெறலாம் எனவும் அரச வட்டாரங்கள் மேலும் கூறின. (அ)

# போதைப்பொருள் விருந்து; பெண் உட்பட 4 பேர் கைது

கொழும்பு, ஜன. 17

கொம்பனித்தெருவில் உள்ள உணவகம் ஒன்றின் 30ஆவது மாடியில் நடத்தப்பட்ட போதைப்பொருள் விருந்து சுற்றுவளைக்கப்பட்டு இளம் பெண் ஒருவர் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன் தினம் அதிகாலை பாணந்துறை, வாலான மத்திய ஊழல் தடுப்புப் பிரிவினரால் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 1 கிராம் கொக்கையின் போதைப் பொருள், 5 கிராம் குஷ் போதைப்பொருள் மற்றும் டான்சின் டெப்லட் எனப்படும் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

முகநூல் மூலம் இந்த விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# 30 குறுந்தூர ரயில் சேவைகள் இரத்து

கொழும்பு, ஜன. 17

நேற்று திங்கள்கிழமை முதல் 30 குறுந்தூர ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஊழியர் பற்றாக்குறை காரணமாக ரயில் சேவைகளை இரத்துச் செய்ய வேண்டியேற்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார். (அ)

# 9 மாவட்டங்களில் சு.க. கை சின்னத்தில்

கொழும்பு, ஜன. 17

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சுதந்திர கட்சி 9 மாவட்டங்களில் கை சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளது.




வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள மாவட்டங்களும் அதில் உள்ளடங்குவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

அத்துடன், ஏனைய மாவட்டங்கள் தொடர்பான இறுதி தீர்மானம் இன்று வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, லங்கா சுதந்திர கட்சியிலிருந்தும், கட்சியின் பதவி நிலைகளில் இருந்தும் தாம் விலகுவதாக, அதன் உப தலைவரும் முன்னாள் அமைச்சருமான பைஸர் முஸ்தப்பா அறிவித்துள்ளார்.

இதற்கான தமது பதவி விலகல் கடிதத்தை லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் அனுப்பி வைத்துள்ளார் என அவர் குறிப்பிட்டார். (அ)

# மகிந்த வாழ்ந்த வீட்டில் குடியேறவுள்ள கோட்டா

கொழும்பு, ஜன. 17

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு செல்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீட்டின் புனரமைப்பு காரணமாக, முன்னாள் ஜனாதிபதி ஸ்டென்மோர் க்ரெசன்ட் டில் அமைந்துள்ள மற்றொரு உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்து வந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில், விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்பதற்காக 400 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான மதிப்பீடு முன்வைக்கப்பட்டது.

ஆனால் கோட்டாபய அதனை நிறைவேற்றவில்லை.



ஆனால் பின்னர் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தியோகபூர்வ இல்லத்தை புனரமைப்பதற்காக 800 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை வழங்க அனுமதி வழங்கினார்.

இந்த வீட்டை புதுப்பிக்க இன்னும் அதிக பணம் செலவிட்டுள்ளதாக தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மகிந்தவின் புதல்வர்களும் வசிக்கும் வகையில் வீட்டில் சில புதிய விடயங்கள் இணைக்கப்பட்டுள்ளதே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

எவ்வாறாயினும், மகிந்த ராஜபக்ஷ அந்த வீட்டுக்கு சென்றதையடுத்து, கோட்டாபய ராஜபக்ஷ, ஸ்டென்மோர் க்ரெசன்ட்டில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்குச் செல்லவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் தற்போது பௌத்தலோக மாவத்தையில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்து வருவதாகவும், வாகனங்களின் ஹோரன்களின் சத்தம் அதிகமாக ஒலிப்பதால், தனக்கு வேறு வீடு வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது. (அ)

# மின்சாரக் கட்டணம் அதிகரிப்பினால் மின்மானி வாசிப்பாளர் மீது தாக்குதல்

கொழும்பு, ஜன. 17

தமது வீட்டுக்கான இந்த மாத மின்சாரக் கட்டணம் அதிகரித்துள்ளதாகக் கூறி, மின் மானி வாசிப்பாளர் ஒருவரை கட்டையால் தாக்கிய சம்பவம் ஒன்று புத்தளம் - மஹகும்புக் கடவல பகுதியில் பதிவாகியுள்ளது.

தாக்குதலுக்கு இலக்கான மின்மானி வாசிப்பாளர் கடும் காயத்திற்குள்ளான நிலையில் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சிலாபம் மின் பொறியியலாளர் அலுவலகத்தின் கீழ் சேவையாற்றும் மின்மானி வாசிப்பாளர் மீதே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மின் கட்டணம் அதிகரித்துள்ளதாக கூறி தாக்குதல் நடத்திய சந்தேகநபர் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 25ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# சி.ஐ.டி என்று கூறி பொதுமக்களின் பணம் பறித்தவர் வவுனியா பொலிஸாரால் கைது

வவுனியா, ஜன. 17

பொலிஸ் சி.ஐ.டி என தன்னை அறிமுகப்படுத்தி பொதுமக்களை ஏமாற்றி பணம் பெற்ற நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கூமாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்கு சென்ற நபரொருவர் குறித்த வீட்டில் தன்னை சி.ஐ.டி என அறிமுகப்படுத்தியுள்ளார்.

அதன் தொடர்ச்சியாக அவர்களுடன் பேசி மகனை வைத்துப் பணம் பெற்றுள்ளது டன், பொலிஸில் இருந்து தனக்கு கிடைத்த யூரியா பசளை தருவதாகவும் கூறி பணம் பெற்றுள்ளார்.

இந்நிலையில் அவர் பசளையும் வழங்காது தொலைபேசி அழைப்பை ஏற்க மறுத்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸில் பாதிக்கப்பட்டவர் தெரியப்படுத்தியிருந்தார்.

இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் பணம் பெற்ற குறித்த நபர் சி.ஐ.டி இல்லை என்பதை உறுதிப்படுத்தியதுடன் அவரை கைது செய்தனர்.

வவுனியா, இறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவு சிறுகதைப் போட்டி



மறைந்த எழுத்தாளர் காவலூர் எஸ். ஜெகநாதன் நினைவாக ஆண்டுதோறும் பத்திரிகைகளில் வெளிவந்த சிறுகதைகளில் மிகச்சிறந்த சிறுகதை ஒன்றைத் தெரிவுசெய்து பரிசளிக்க காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை தீர்மானித்திருக்கின்றது.

2022ம் ஆண்டு வெளிவந்த சிறுகதைகள் இந்த தெரிவில் இடம்பெறவிருக்கின்றன. அவ்வாறு முதல்தடவையாக 2022ல் வெளிவந்த உங்கள் சிறுகதைகளின் பிரதியை அனுப்பிவையுங்கள்.

அதனோடு இணைந்ததாக புதிதாக எழுதப்பட்ட (இதுவரை வெளிவராத) சிறுகதைகளில் மூன்று சிறுகதைகளை தெரிவுசெய்து பரிசு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் எழுத்தாளர்கள் தமது சிறுகதைகளை அனுப்பிவைக்கலாம்.

**சிறுகதைகளை அனுப்ப வேண்டிய முகவரி:**
**காவலூர் ஜெகநாதன் அறக்கட்டளை**
**707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

ஊடக அனுசாரணை: ஈழநாடு

ஈழநாடு






## சுதந்திரக் கட்சி நேற்று யாழில் கட்டுப்பணத்தை செலுத்தியது

கொழும்பு, ஜன. 17

சுதந்திரக் கட்சி யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப் பணத்தை செலுத்தியது.

நேற்று திங்கட்கிழமை முற் பகல் 11 மணியளவில் யாழ்ப் பாண மாவட்ட செயலகத்தி லுள்ள தேர்தல்கள் அலுவ லகத்தில் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பாராளு மன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனால் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

யாழ்.மாவட்டத்தின் சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் இதன்போது கட்டுப் பணம் செலுத்தப்பட்டது. (அ)

# உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படமாட்டாது

## அமைச்சர் மஹிந்த அமரவீர தகவல்

கொழும்பு, ஜன. 17

**உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்படமாட்டாது என விவசாய மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**



ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இந்த விடயத் தைக் குறிப்பிட்டார்.

தனக்கு தெரிந்தவரை தேர் தலை நடத்துவதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். வாக்கெடுப்பு ஒத்தி வைக்கப்படாது என கூற விரும் புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேனவின் நிலை குறித்து வருந்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

அவருடன் தங்களுக்கு எந்த தனிப்பட்ட பிரச்னையும் இல்லை எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார். (அ)

### வடைக்குள் காணப்பட்ட கரப்பான் பூச்சி;

## உணவகத்துக்கும், சமையற் கூடத்துக்கும் முறையே ரூ. 60,000, ரூ.20,000 தண்டப்பணம்

யாழ்ப்பாணம், ஜன. 17

கடந்த மாதம் 4ஆம் திகதி வடையில் கரப்பான் பூச்சி காணப்படுவதாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டைய டுத்து, யாழ்ப்பாணம் சிவன் கோவிலடியில் அமைந்துள்ள பிரபல சைவ உணவகம், அன் றைய தினமும் மறுதினமும் யாழ்.நகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவனால் பரிசோதிக்கப்பட்டது.

இதன்போது பல்வேறு குறைபாடுகள் இனங்காணப் பட்டன. அத்துடன் குறித்த உணவகத்துக்கு வடை தயா ரித்து வழங்கும் சமையற் கூடமும் இனங்காணப்பட்டது. பொதுச் சுகாதாரப் பரிசோத கரின் பரிசோதனையில் அங் கும் குறைபாடுகள் இனங் காணப்பட்டன.

இதனையடுத்து தனித்தனிய ாக உணவகத்துக்கும், சமையற் கூடத்துக்கும் எதிராக மேலதிக



நீதவான் நீதிமன்றில் கடந்த மாதம் 6ஆம் திகதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவனால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து உணவகத் தையும் சமையற்கூடத்தையும் வழக்கு நடவடிக்கைகள் முடி வுறுத்தப்படும் வரை சீல் வைத்து மூடுமாறு நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதனையடுத்து உணவக மும், சமையற்கூடமும் பொது சுகாதாரப் பரிசோதகர் பா. சஞ்சீவனால் சீல் வைத்து மூடப் பட்டது.

இந்நிலையில் நேற்று நீதி மன்றில் வழக்கு அழைக்கப் பட்டபோது எதிராளிகள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்து உணவகத்துக்கு 60 ஆயிரம் ரூபா தண்டமும், சமையற்கூடத்திற்கு 20 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட் டது.

அத்துடன் கடையை மீளத் திறப்பதற்கான அனுமதியையும் நீதிமன்றம் வழங்கியது.

இதையடுத்து சுமார் 40 நாட்களாக சீல் வைத்து மூடப் பட்டிருந்த குறித்த உணவகமும், சமையற்கூடமும் நீதிமன்றின் கட்டளையினையடுத்து நேற்று திறக்கப்பட்டன. (அ)

## பல் மருத்துவ உபகரணங்களுக்கு வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு

### பல் அறுவைச் சிகிச்சை நிபுணர் சங்கம் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 17

அரச வைத்தியசாலை களில் பல் மருத்துவ உபகர ணங்கள் மற்றும் மருந்துக ளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுவதாக அரச பல் அறு வைச் சிகிச்சை நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் செயலாளர் மருத்துவ நிபுணர் மஞ்சுள ஹேரத் கூறுகையில்-

பல் நிரப்புதல், நரம்பு நிரப்புதல், எலும்பு மூட்டு சிகிச்சை, பல் பாதுகாப்பு உள்ளிட்ட சிகிச்சைகளுக்கு தேவையான மருந்துகளுக்கு கடும் தட்டுப் பாடு நிலவுகிறது.

அந்த நிலை காரணமாக சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருப்போர் பட்டியலில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றார்.

இதனிடையே மருந்து தட்டுப்பாடு காரணமாக அரச மருத்துவ மனைக்கு சிகிச்சைக் காக வரும் நோயாளிகள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

சுகாதார அமைச்சர் கெஹ லிய ரம்புக்வெல்லவிடம் வினவிய போது, அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய் வதற்கான ஏற்பாடுகள் ஏற்க னவே செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட் டார். (அ)

## நிலக்கரி விலை அதிகரிப்பினால் இலங்கைக்கு பாதகமான நிலை!

கொழும்பு, ஜன. 17

உலக சந்தையில் நிலக்கரி யின் விலை மிக அதிகமாக அதி கரித்துள்ளதாக இலங்கை நிலக் கரி நிறுவனத்தின் தலைவர் ஷெஹான் சுமனசேகர தெரிவித் திருந்தார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர், எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்த சில நாடுகள் மீண்டும் நிலக்கரிக்கு மாறிய தன் மூலம் அதற்கான தேவை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக உலக சந்தையில் நிலக்கரியின் விலை மீண்டும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இவ்வருடத்துக்காக இலங் கைக்கு இறக்குமதி செய்யப்பட வுள்ள 33 நிலக்கரி கப்பல்கள் எவ்வித பிரச்னையும் இன்றி இலங்கைக்கு கொண்டுவரப் படும் என எதிர்பார்க்கப்படு கிறது.

எவ்வாறாயினும், உலக சந்தையில் அதீதமாக அதிகரித் துள்ள நிலக்கரியின் விலை எதிர்காலத்தில் படிப்படியாக குறையும்-என்றார். (அ)

## தேர்தல் நடத்துவதில் தவறு எதுவும் இல்லை

### சபாநாயகர் மகிந்த யாப்பா

கொழும்பு, ஜன. 17

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் ஜனநாயகத்தை பாதுகாப்பது முக்கியம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

ஹொரணை - பன்னில கிரா மத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களை வழங்கும் நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு கூறினார்.

எனவே அதற்கேற்ப தேர் தலை நடத்துவதில் தவறில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விவகாரம் விசேட அறிவிப்பு விடுப்பார் மைத்திரி?



கொழும்பு, ஜன. 17

ஈஸ்டர் தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் முன்னாள் ஜனாதி பதி மைத்திரிபால சிறிசேன பாராளுமன்றத்தில் விளக்க மளிக்கவுள்ளார்.

இன்று செவ்வாய்க்கிழமை முதல் 20ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளது.

இந்தநிலையில், அந்தக் காலப்பகுதியில் அவர் விளக்க மளிப்பார் எனத் தெரிவிக்கப் படுகிறது.

ஈஸ்டர் தாக்குதலில் உயிரி ழந்தவர்களுக்கு 100 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள் ளது.

எனினும், அதனைச் செலுத் தும் அளவுக்கு சொத்து தம்மி டம் இல்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார். (அ)




## கிளிநொச்சியில் கட்டுப்பணம் செலுத்தியது சமத்துவக் கட்சி

கிளிநொச்சி, ஜன. 18
கிளிநொச்சியில் உள்ளூ ராட்சி தேர்தலுக்கான கட்டுப் பணத்தை நேற்று சமத்துவக் கட்சி செலுத்தியுள்ளது.
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையிலான சமத்துவக் கட்சியினர் கரைச்சி, பச்சிலைப் பள்ளி, பூநகரி பிரதேச சபை களில் போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தை நேற்று முற் பகல் 11 மணியளவில் செலுத்தி னர். (அ)

## திருட்டு, ஊழல், மோசடியில் ஈடுபடாத தரப்புடன் இணைந்து செல்லத் தயார்!

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு, ஜன. 17
திருட்டு, ஊழல் மற்றும் மோசடியில் ஈடுபடாத எவருட னும், நாம் முன்வைத்துள்ள நல்ல திட்டங்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கும் தரப்பினருடனும் மாத்திரமே நாம் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்பத் தயாராக உள் ளோம் என முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள் ளார்.
தெல்துவ கனேவத்த புராண விகாரையில் இடம்பெற்ற மத வழிபாட்டின் பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கை யில்- சில தரப்பினர் நேரடியாக ஹெலிகொப்டர் மூலம் சென்று ஜனாதிபதி பதவியை பெற்றுக் கொள்ளலாம் என்று கருதுகின்றனர். அவர்களிடத் தில் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து எந்தவொரு தீர்மானங் களும் இல்லை.
மேலும் அவர்கள் இதுவரை யில் தெளிவான கொள்கை களை வெளிப்படுத்தவில்லை.
இருப்பினும், நாம் தெளி வான கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுத்துள்ளோம். இதன் ஊடாக எதிர்காலத்தில் பயணிப்போம்.
அதன் மூலம் நாம் செயற் படுவோம். இருப்பினும் இனி வரும் காலங்களில் எல்லோரு டனும் இணைந்து பயணிக்க முடியாது. அவ்வாறு செயல் பட போவதுமில்லை.
எமது கொள்கைகளையும், திட்டங்களையும் புரிந்து அதனை ஏற்று அதற்கமைவாக செயல்படும் தரப்பினரை மாத் திரமே எங்களுடன் இணைத்து பயணிப்போம்-என்றார். (அ)

## பிலியந்தலையில் யுவதியை கடத்திய கடற்படை சிப்பாய்

கொழும்பு, ஜன. 17
பிலியந்தலை பொலிஸ் பிரி விற்குட்பட்ட பெலென்வத்த பகுதியில் மோட்டார் சைக்கி ளில் சென்ற நபர் ஒருவரால் இளம் பெண் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.
இந்த சம்பவம் தொடர்பில் பிலியந்தலை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட் டின் அடிப்படையில் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
கடத்தலை மேற்கொண்ட சந்தேகநபர் மதவாச்சி பிரதேசத் தில் வசிக்கும் திருமணமான கடற்படை சிப்பாய் என பொலிஸார் தெரிவித்தனர்.
கடத்தப்பட்ட யுவதியுடன் சந்தேக நபர் காதல் தொடர்பு வைத்திருந்தார் என்றும், பின் னர் அதனை 6 மாதங்களுக்கு முன்னர் நிறுத்தியுள்ளார் என் றும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.
கடத்தப்பட்ட யுவதிக்கு சந்தேக நபர் பல சந்தர்ப்பங்களில் அச்சுறுத்தல் விடுத்துள்ளார் எனவும் பொலிஸ் விசாரணை களில் இருந்து தெரியவந்துள் ளது.
கடத்தல் தொடர்பில் பிலி யந்தலை பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டுள் ளனர். (அ)

## சிங்களமொழி பயிற்சி ஆசிரியர்கள் வடக்கு பாடசாலைகளில் இணைப்பு

### மாகாண கல்வி செயலருக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், ஜன. 17
இரண்டாம் மொழி சிங்கள டிப்ளோமா சான்றிதழ் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த ஒரு பகுதி மாணவர்களை வடக்கு மாகாணத்தில் உள்ள பாட சாலைகளில் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.
இந்து பௌத்த கலாசாரப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் இரண்டாம் மொழி சிங்களக் கற்கைநெறியை பூர்த்தி செய்து மேலதிக பயிற்சி களைப் பெற்ற மாணவர்களே இவ்வாறு பாடசாலைகளில் தற்காலிகமாக கொடுப்பனவு கள் எதுவுமின்றி இணைக்கப் படவுள்ளனர்.
இந்த விடயம் தொடர்பில் இந்த பௌத்த பேரவையில் ஆசி ரியராகக் கடமையாற்றும் ஆசிரியர் சுமெக்சன் தெரிவிக் கையில்-
இந்த பௌத்த பேரவையி னால் நடத்தப்படும் இரண் டாம் மொழி சிங்களப் பாட நெறியை சுமார் 23,000 மாண வர்கள் இதுவரை கற்றுள்ள னர்.
அதன் முதற்கட்டமாக மேல திக பயிற்சிகளை பெற்ற ஒரு பகுதி மாணவர்களை தற்காலிக ஆசிரிய பயிற்சியாளராக வட மாகாண ஆளுநர் நியமிக்க நட வடிக்கை எடுத்தமைக்கு நன்றி யைத் தெரிவிக்கிறோம்-என் றார். (அ)

## ரயில்வே சேவைக்குள் 3,000 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தீர்மானம்

கொழும்பு, ஜன. 17
ரயில்வே சேவைக்கு புதிதாக 3,000 பணியாளர்களை இணைத் துக் கொள்ளவுள்ளதாக போக்கு வரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.
புதிய ஆட்சேர்ப்புக்கான நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறி னார்.
தற்போது அரச சேவைக்கு உள்வாங்கப்பட்டுள்ள 3,000 செயலணி ஊழியர்களில் 3000 பேர் ரயில்வே சேவைக்கு இணைத்துக் கொள்ளப்படவுள் ளனர் எனவும் அமைச்சர் கூறி னார்.
“ரயில்வே துறை நீண்ட நாட்களாகப் பணியாளர்களை பணியமர்த்தவில்லை. ஊழியர்களை நியமித்து சம்ப ளம் கொடுக்க வழியில்லை. அதனால் தற்போது பொதுப் பணித்துறையில் 3000 பணியா ளர்களை பணியில் அமர்த்தும் பணியில் ஈடுபட்டுள்ளோம். ஒன்பது ரயில் ஓட்டுநர்கள் மட்டுமே. ஓய்வு பெற்றுவிட் டனர்” என்றும் அவர் கூறினார். (அ)

## நீர்க் கட்டணங்களை செலுத்த புதிய முறை

கொழும்பு, ஜன. 17
புதிய முறைமையின் ஊடாக நீர்க் கட்டணங்களை வழங்கு வதற்கும் செலுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்த நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.
அதன்படி, எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்.மாவட்டத்தில் இந்த வேலைத்திட்டம் ஆரம் பிக்கப்படவுள்ளதாக குறித்த சபையின் பொது முகாமையா ளர் பியால் பத்மநாத குறிப்பிட் டார்.
இதன்மூலம் வாடிக்கையா ளர்களுக்கு நீர்க் கட்டண சீட்டு வழங்கும் இயந்திரம் மூலம் மாதாந்த கட்டணத் தொகையை வழங்குவதுடன், வங்கி அட் டைகள் மூலம் நீர் கட்டணங் களைச் செலுத்தும் வாய்ப்பும் கிடைக்கும் என்று அவர் கூறியுள்ளார்.
முன்னோடித் திட்டமாக ஆரம்பிக்கப்படும் இந்த வேலைத்திட்டம் எதிர்காலத் தில் நாடளாவிய ரீதியில் அமுல் படுத்தப்படும் என எதிர்பார்க் கப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

## அரச அதிகாரிகள் சம்பளத்தை இரண்டு கட்டமாக வழங்க முடிவு

கொழும்பு, ஜன. 17
அரச நிறுவனங்களில் நிறைவேற்று தர அதி காரிகள் மற்றும் சாதாரண அதிகாரிகளின் சம்ப ளத்தை மாதத்தில் இரண்டு வெவ்வேறு தினங் களில் இரண்டு கட்டமாக வழங்க திறைசேரி தீர்மானித்துள்ளது. நாட்டின் நிதி நெருக்கடியை கவனத்தில் கொண்டு திறைசேரி இந்த தீர்மா னத்தை எடுத்துள் ளதாக தெரியவருகிறது.
இதற்காக நிறைவேற்று தர அதிகாரிகள் மற்றும் சாதாரண அதிகாரிகளின் சம்பளத்தை வெவ்வேறு தினங்களில் வழங்கும் வகையில் பணத்தை வெளி யிடுவதற்கு தேவையான தகவல்களை வழங்கு மாறு திறைசேரியின் நடவடிக்கை திணைக்களம் அரச நிறுவனங்களின் பிரதான நிதி அதிகாரிகள், கணக்காய்வாளர்கள், நிதிப் பணிப்பாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது.
இதனடிப்படையில், அரச ஊழியர்களுக்கான சம்பளம் மாதந்தோறும் இருவேறு தினங்களில் இரண்டு கட்டமாக வழங்கப்படவுள்ளது. (அ)

## 2 சிறுவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய கான்ஸ்டபிள் கைது

கொழும்பு, ஜன. 17
குளித்துக் கொண்டிருந்த இரண்டு இளம் சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் வலஸ்முல்ல பொலிஸா ரால் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டார்.
முறைப்பாட்டுக்கு அமைய ஒகேவெல பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரே கைது செய்யப்பட்டதாக பொலி ஸார் தெரிவித்தனர்.
களுத்துறை பொலிஸ் பயிற்சி நிலையத் தில் பயிற்சி பெற்று வீடு திரும்பிய சந்தேக நபர் நேற்று முன் தினம் வலஸ்முல்ல கல்வல பிரதேசத்தில் குளித்துக்கொண்டிருந்த இரு சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என தெரிவிக்கப்பட் டது.
இதையடுத்து குறித்த இரு சிறுவர்களும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப் படவுள்ளனர் என கூறப்பட்டது. (அ)

## கொழும்பு மாநகரசபையில் சுதந்திரக் கட்சிக்குள் பிளவு!

### மன்சில் அணி சுயாதீனமாக போட்டி

கொழும்பு, ஜன. 17
உள்ளூராட்சிமன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபை எதிர்க்கட்சித் தலைவரும் சுதந்திர கட்சி வடகொழும்பு அமைப்பாளருமான எம்.எச். மன்சில் சுயாதீன அணியாக போட்டியிட தீர்மானித்துள்ளார்.
சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி கடந்த 25 வருடங்களுக்கும் அதிக காலம் கொழும்பு மாநகர சபையை பிரதிநிதித்துவப்படுத்திவரும் எம்.எச். மன்சில், சுதந்திர கட்சி கடந்த சில தினங்களுக்கு முன்னர் அமைத்த கூட்டணியில் திருப்தியில்லாத நிலையிலேயே இவ்வாறு எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட 47 தொகுதிகளிலும் தனது தலைமையில் சுயாதீன அணியொன்றை களமிறக்க தீர்மானித்துள்ளார் என தெரியவருகின்றது. அதன் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் சுயாதீன அணியாக போட்டியிடுவதற்காக இவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட 47 தொகுதி களிலும் கட்டுப்பணம் செலுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

விஷ்ணுபிரகாஷ் நல்லதம்பி

# ஒரே நாடு ஒரே தேர்தல்
# ஆளுங்கட்சியாக எதிர்ப்பு தெரிவித்த அ. தி. மு. க. இப்போது ஆதரிப்பது ஏன்?




ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டத்திற்கு அதிமுக ஆட்சியில் முதலமைச்சராகப் பதவி வகித்த போது எதிர்ப்பு தெரிவித்த எடப்பாடி பழனிசாமி, இப்போது அத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து சட்ட ஆணையத்திற்கு கடிதம் எழுதியுள்ளார்.

**அ.தி.மு.கவின் நிலைப்பாடு**

மத்திய சட்ட ஆணையம் "ஒரே நாடு, ஒரே தேர்தல்" தொடர்பாக கருத்து தெரிவிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அண்மையில் கடிதம் அனுப்பியிருந்தன. இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்குமாறு, "அ.இ.அ.தி.மு.க. இடைக்கால பொதுச் செயலாளர்" எனக் குறிப்பிட்டு எடப்பாடி பழனிசாமிக்கு கடிதம் அனுப்பியிருந்தது சட்ட ஆணையம்.

அந்தக் கடிதத்தைக் காட்டி, அதிமுகவின் ஒற்றைத் தலைமையாக பழனிசாமியை மத்திய சட்ட ஆணையம் அங்கீகரித்துள்ளதாக அவரது தரப்பினர் தெரிவித்து வந்தனர்.



ஜனவரி 16ஆம் திகதிக்குள் தங்களுடைய கருத்துகளை தெரிவிக்கும்படி அரசியல் கட்சிகளுக்கு சட்ட ஆணையம் தெரிவித்திருந்த நிலையில் அதிமுக தரப்பிலிருந்து தற்போது இந்திய சட்ட ஆணையத்திற்கு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

அதில் "ஒரே நாடு ஒரே தேர்தல்" திட்டத்திற்கு அதிமுக ஆதரவு அளித்திருப்பதாகக் குறிப்பிட்டு எடப்பாடி பழனிசாமி பதில் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியானது.

**அ.தி.மு.க. ஏன் ஆதரிக்கிறது?**

சட்ட ஆணையத்திற்கு அதிமுக சார்பாக அனுப்பியுள்ள பதில் கடிதம் அதிகாரபூர்வமாக வெளியாகாத நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக அந்த கட்சியின் செய்தித் தொடர்பு பிரிவு செயலாளர் வைகைச்செல்வன் எம்முடன் பேசினார்.

"ஒரு 5 ஆண்டு காலகட்டத்தில் மக்களவைத் தேர்தல், சட்டமன்றத் தேர்தல், உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் என பல தேர்தல்கள் நடக்கின்றன. இதனால் கால விரயம் ஏற்படுவது மட்டுமின்றி, மக்களின் வரிப்பணமும் செலவாகிறது.

மேலும் தேர்தல் நடக்கும் காலகட்டத்தில் நடைமுறையில் இருக்கும் தேர்தல் நன்னடத்தை விதிமுறைகளினால், மக்களுக்கு தேவையான நலத் திட்ட உதவிகளை பல நேரங்களில் செயல்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்டுதான் அதிமுகவின் இடைக்கால பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இருக்கிறார்," என்று தெரிவித்தார் அவர்.

2018ஆம் ஆண்டு இருந்த நிலைப்பாட்டை ஏன் மாற்றியது என்ற கேள்விக்கு, "அப்போதைய சூழ்நிலையில் கட்சி எதிர்ப்பு தெரிவித்தது. இப்போது ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து இருக்கிறோம்," என்று வைகைச்செல்வன் கூறினார்.

**அ.தி.மு.கவை விமர்சிக்கும் காங்கிரஸ்**

"எப்படியாவது ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிட மாட்டோமா என்ற நப்பாசையில் அதிமுக ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து இருக்கிறது," என்று காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற குழுத் தலைவர் செல்வபெருந்தகை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

2018ஆம் ஆண்டு, ஒரே நாடு ஒரே தேர்தல் விவகாரம் தொடர்பாக அதிமுக ஆட்சியின் போது அனுப்பப்பட்ட கடிதத்திற்கு எடப்பாடி பழனிசாமி எதிர்ப்பு தெரிவித்து இருந்தார்.

"இத்திட்டத்தின் மூலம் அதிமுக அரசின் பதவிக்காலம் முன்கூட்டியே முடியும் என்பதால், அதிமுக இந்த திட்டத்திற்கு ஆதரவு அளிக்காது என்று எடப்பாடி பழனிசாமி சட்ட ஆணையத்திற்கு கடிதம் மூலம் எழுதி இருந்தார். ஆனால் ஆட்சியில் இப்போது இல்லாத நிலையில் 2024ஆம் ஆண்டு மக்களவை தேர்தலுடன் சட்டமன்ற தேர்தலை எதிர்கொண்டு ஆட்சிக்கு வர முடியும் என்ற நப்பாசையில் இந்த கருத்தை தெரிவித்து இருக்கிறார். அவர்களின் எண்ணம் துளியும் ஈடேறாது," என்று அந்த அறிக்கையில் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.



**அட்டவணைக்கு பத்துக்கு ஆபத்து**

சட்ட ஆணையம் அரசியல் கட்சிகள் மட்டுமின்றி, மூத்த பத்திரிகையாளர்கள், வழக்கறிஞர்களும் கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் விவகாரம் தொடர்பாக தனது கருத்தை பதிவு செய்துள்ள மூத்த பத்திரிகையாளர் ஷ்யாம் எம்மோடு பேசிய போது, "அதிமுகவின் நிலைப்பாடு அதிர்ச்சி அளிக்கிறது. இந்த விவகாரத்தில் எம். ஜி. ஆர்., ஜெயலலிதாவின் கொள்கைகளுக்கு முரணாக எடப்பாடி பழனிசாமி முடிவெடுத்துள்ளார்," என்று கூறினார்.

சட்ட ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில் கட்சி தாவல் தடைச் சட்டத்தை தளர்த்தும் வகையில் அட்டவணை பத்தில் மாற்றங்களை கொண்டு வரும் திட்டமும் இடம்பெற்றுள்ளது.

இது நடைமுறைக்கு வந்தால், பாஜக போன்ற தேசிய கட்சிகள் "தொங்கு பாராளுமன்றம்" அமையும் போது எளிதாக மாநிலக் கட்சி உறுப்பினர்களை தங்கள் அணிக்கு வளைத்து போடும் வசதி இதில் இருக்கிறது. இது ஜனநாயகத்திற்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தும், என்று அவர் தெரிவித்தார்.

**தி.மு.கவின் நிலைப்பாடு**

ஒரே நாடு ஒரே தேர்தல் விவகாரம் தொடர்பாக திமுகவின் நிலைப்பாடு குறித்து இன்னும் அதிகாரபூர்வமாக தெரிவிக்கவில்லை. ஆனால் அந்த கட்சி சார்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய தமிழ்நாடு சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "ஒரே நாடு ஒரே தேர்தலுக்கு அதிமுக ஆதரவு அளிப்பதாக எடப்பாடி பழனிசாமி தெரிந்து பேசினாரா, தெரியாமல் பேசினாரா எனத் தெரியவில்லை.

அதிமுகவுக்கு இப்போது இருக்கும் 60 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கும் நிலையில் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டால், ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட கிடைக்க மாட்டார்கள்," எனக் கூறினார்.



# பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது ஒரு தேசிய முன்னுரிமையாக அமைய வேண்டும்

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் உயர் நீதிமன்றம் கடந்தவாரம் வழங்கிய தீர்ப்பும் இலங்கையின் இரு முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் இரு இராணுவ அதிகாரிகள் மீது கனடா அரசாங்கம் விதித்திருக்கும் தடைகளும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வது ஒரு தேசிய முன்னுரிமையாக வரவேண்டும் என்பதை உணர்த்துவதாக தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியிருக்கிறது.

இது தொடர்பில் பேரவை விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் தொடர்பில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பும் மனித உரிமை மீறல்களுக்காக கனடிய அரசாங்கம் விதித்திருக்கும் தடைகளும் ஆட்சிமுறையில் பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தை தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் வெளிப்படுத்தியிருக்கின்றன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவும் பாதுகாப்புத்துறையின் நான்கு உயர்மட்ட உறுப்பினர்களும் தங்களது பொறுப்புக்களை அலட்சியம் செய்ததன் விளைவாக 500 க்கும் அதிகமான குடிமக்கள் உயிரிழக்கவும் காயமடையவும் நேர்ந்தமைக்கு குற்றப்பொறுப்புடையவர்கள் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

பொது வாழ்வில் தண்டனையின்மையும் பொறுப்புக்கூறல் இன்மையும் காணப்படுகின்ற சூழ்நிலையின் பின்புலத்தில் இந்த தீர்ப்பு ஒரு மைல் கல்லாகும்.

அரசில் உயர் பதவிகளைப் பெறுவதென்பது தேர்தல்களில் வெற்றிபெற்றவர்களினால் அல்லது அரசியல் அதிகாரத்தில் உள்ளவர்களுடன் நெருக்கமாக இருப்பவர்களினால் ஒரு வரப்பிரசாதமாகவும் சிறப்புரிமையாகவும் நீண்டகாலமாக நோக்கப்பட்டு வருகிறது.

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

இலங்கையில் உயர் பதவிகளை வகிப்பதென்பது தேசிய நலன்களுக்காக சேவை செய்வதை விடவும் சுய இலாபம் அடைவதற்கும் நெருக்கமானவர்களுக்கு உதவி செய்வதற்குமான ஒரு வாய்ப்பாகவே நோக்கப்பட்டு வந்திருக்கிறது.

குண்டுத்தாக்குதல் அச்சுறுத்தல் குறித்து திரும்பத் திரும்ப எச்சரிக்கைகள் செய்யப்பட்டதற்கு மத்தியிலும் குடிமக்களை பாதுகாக்க தவறியமைக்காக உயர் நிறைவேற்று அதிகார மட்டங்களில் இருந்தவர்களில் சிலரை பொறுப்பாளிகளாக்கி தேசிய நீதித்துறையின் உயர்பீடம் தீர்ப்பளித்திருப்பதை தேசிய சமாதானப் பேரவை வரவேற்கிறது.

நாட்டையும் மக்களையும் பெரும் இடர்பாட்டுக்குள்ளாக்கியிருக்கும் பொருளாதார வீழ்ச்சி தொடர்பில் நீதிமன்றங்களின் முன்னால் வேற பல வழக்குகள் இருக்கின்றன. பொருளாதார வீழ்ச்சி அதிகப்பெரும்பான்மையான மக்களின் வாழ்வை அவலத்துக்குள்ளாக்கியிருப்பதுடன் மக்களின் நாற்பது சதவீதமானவர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் தள்ளியிருக்கிறது.



ஈஸ்டர் குண்டுவெடிப்புக்களினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்களினால் பெற்றுக்கொள்ளப் பட்ட நீதியை பொருளாதார வீழ்ச்சியினால் பாதிக்கப் பட்டிருக்கும் இலட்சக்கணக்கான மக்களாலும் பெற்றுக் கொள்ளப்படும் என்று நாம் நம்புகிறோம். தவறான முகாமைத்துவம் மற்றும் மோசடி போன்ற பொருளா தாரக் குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களும் பொறுப் புக்கூற வைக்கப்படவேண்டும். அவர்கள் தங்கள் குற்றச்செயல்களுக்காக விலையை செலுத்த வைக்கப்பட வேண்டும்.

கடந்த காலப் பிரச்சினைகளுக்கான பொறுப்புக்கூறலை கையாளத் தவறியதன் விளைவாகவே மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் மற்றும் வெளிநாட்டு அரசாங்கங்களின் நடவடிக்கைகள் வடிவில் சர்வதேச தலையீடுகளுக்கு கதவு திறந்துவிடப்பட்டது. சர்வதேச மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறவேண்டியவர்கள் என்று கூறி கனடா அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகள் மகிந்த ராஜபக்சவையும் கோட்டாபய ராஜபக்சவையும் மற்றும் இரு இராணுவ அதிகாரிகளையும் இலக்குவைத்து கடந்த வாரம் தடைகளை விதித்திருக்கிறது.

மனித உரிமை மீறல்களைச் செய்ததாக குற்றஞ்சாட்டப்படுபவர்களை தேசிய நீதித்துறைச் செயன்முறைகளின் ஊடாக பொறுப்புக்கூறவைக்க இலங்கை தவறிவிட்டது என்ற அடிப்படையிலேயே கனடா அரசாங்கம் அதன் நடவடிக்கையை நியாயப்படுத்தியிருக்கிறது.

இலங்கையில் பொருளாதாரக் குற்றங்கள் மீது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை முக்கிய கவனம் செலுத்தியிருக்கிறது. அரசியல் தலைவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் நாட்டின் சொத்துக்களைக் களவாடி உள்நாட்டில் அல்லது வெளிநாடுகளில் இரகசியமாக பதுக்கிவைத்திருப்பதே பொருளாதாரக் குற்றங்கள் எனப்படுகின்றன. இந்த சர்வதேச ஆபத்தை கையாளுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையிடம் களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்புத்திட்டம் ஒன்று இருக்கிறது.

களவாடப்பட்ட சொத்துக்கள் மீட்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு தற்போதைய அரசாங்கம் சட்டம் ஒன்றைக் கொண்டுவரவேண்டியது அவசியமாகும். வெறுமையாக இருக்கும் நாட்டின் பணப்பேழையை நிரப்புவதற்கு முறைகேடாக சேர்க்கப்பட்ட பணம் பயன்படுத்தப்படுவதை உறுதிசெய்வது அவசியமானதாகும்.

கடந்த ஒரு வருடமாக ஏற்கெனவே கடுமையான அதிர்ச்சிகளுக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை மக்களுக்கு கடந்த வாரத்தைய மிகவும் முக்கியத்தவம் வாய்ந்த இரு நிகழ்வுகளும் ஒரு அதிர்சியைக் கொடுத்திருக்கும். இலங்கையின் கட்டமைப்புக்களிலும் மக்களின் உணர்வுகளிலும் பொறுப்புக்கூறல் கோட்பாடு நிறுவனமயப்படக்கூடிய வாய்ப்பை இந்த இரு நிகழ்வுகளும் ஏற்படுத்தும் என்பதே அவற்றில் உள்ள வரவேற்கத்தக்க ஆரோக்கியமான அம்சமாகும்.

உயர் நீதிமன்றத்தினால் வெளிக்காட்டப்பட்ட தேசிய பொறுப்புக்கூறல் பொறிமுறை சர்வதேச தலையீடுகளை தவிர்ப்பதற்கும் தேசிய செயன்முறைகளை முன்னெடுப்பதற்கும் உதவும். அதிகாரப் பதவிகளைப் பெறுபவர்களும் தேசிய தலைமைத்துவமும் மக்களையும் அவர்களின் மனித உரிமைகளையும் அவமதிக்காமல் இனிமேல் பொறுப்புடன் செயற்படும் என்று தேசிய சமாதானப் பேரவை நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது. •

# வடக்கு, கிழக்கில் டேவிட் பீரிஸ் குழுமத்தின் கோ - கார்டிங்கை பிரபலப்படுத்தும் திட்டம்

டேவிட் பீரிஸ் குழுமத்தினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தற்பொழுது நடைமுறையில் உள்ள வணிகங்களை ஊக்குவிக்கும் விசேட திட்டத்தில் மேலும் ஒரு படியாக இந்த மாகாணங்களில் கோ-கார்ட்டிங் விளையாட்டை பிரபலப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை 2023 ஜனவரி 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் பண்ணை துறைமுக வீதியிலும், காத்தான்குடி மெரைன் ட்ரைவ் சதுக்கத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் வர்த்தக சம்மேளனங்கள் டேவிட் பீரிஸ் குழுமத்துடன் அண்மையில் நடத்திய கலந்துரையாடலின் விளைவாக இந்த நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோ-கார்ட்டிங் விளையாட்டை பிரபலப்படுத்துவதன் ஊடாக பிராந்தியத்தில் உள்ள வீரர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் செல்வதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் காலத்தின் தேவையாக உள்ள சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய ஒத்துழைப்பை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஜனவரி 18ஆம் திகதி (பி.ப 3.00 மணி முதல் பி.ப 6.00 மணிவரை) மற்றும் 19ஆம் திகதி (மு.ப 10.00 மணி முதல் பி.ப 5.00 மணிவரை) காத்தான்குடி மெரைன்



ட்ரைவ் சதுக்கத்திலும், 19 மற்றும் 20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பண்ணை வீதியில் மு.ப 10.00 மணி முதல் 5.00 மணிவரையும் தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்ட மினி கோ-கார்ட்டிங் பாதையில் முன்னர் தெரிவுசெய்யப்பட்ட கோ-கார்ட்டிங் செய்பவர்கள் செலுத்தவிருப்பதுடன், இந்தப் பொழுது போக்கு அம்சத்தை எந்தவொரு நபரும் இலவசமாக வந்து பார்வையிட முடியும்.

டேவிட் பீரிஸ் குழுமத்தில் அங்கம் வகிக்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மக்கள் பங்குபற்றும் கிரிக்கட் போட்டியும் கோ-கார்ட்டிங் நிகழ்ச்சித் திட்டத்துக்கு சமாந்தரமாக காத்தான்குடியில் நடத்தப்படும்.

இலங்கையின் முன்னணி வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவேற்) லிமிடெட் நிறுவனம் மற்றும் நிதி சேவையை வழங்குவதில் முன்னோடியான அசட்லைன் பைனான்ஸ் லிமிடட் நிறுவனம் ஆகியவற்றை முன்னணியாகக் கொண்ட டேவிட் பீரிஸ் குழுமம் லொஜிஸ்டிக் மற்றும் நவீன களஞ்சிய வசதி, காப்புறுதி சேவை, காணி மற்றும் சொத்துக்களில் முதலீடு, தகவல் தொழில்நுட்பம், இயற்கை விவசாயம், கடல்சார் மற்றும் கப்பல் சேவைகள், வீட்டுக்கான இலத்திரனியல் பொருட்கள், ரேசிங் மற்றும் பொழுதுபோக்கு போன்ற துறைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 22 நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.

இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை 0740231295 (கஜன்) - யாழ்ப்பாணம் அல்லது 0777445610 (ரவிச்சந்திரன்) - காத்தான்குடி என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

‘மரம் வளர்ந்த பகுதியெல்லாம் உங்களிற்குரியதல்ல’

# வனவளத் திணைக்களத்துக்கு சூடு வைத்த ஜனாதிபதி ரணில்!

யாழ்ப்பாணம், ஜன. 17

மரம் வளர்ந்திருக்கும் இடங்களெல்லாம் காடுகள் அல்ல. மக்கள் வசிக்காத இடங்களில் காடுகள் வளர்ந்திருக்கும். அதற்காக அந்த இடங்களையெல்லாம் வனவளத் திணைக்களம் உரிமை கொண்டாடமுடியாது. அப்படியானால், பலாலிக்குள் வாருங்கள். நிறைய காடுகளை காட்டுகிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வனவளத் திணைக்களத்தினருக்கு சூடு வைத்துள்ளார்.

வடக்கில் கபளீகரம் செய்யப்பட்டுள்ள காணிகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் நடந்தபோது, ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

இந்த கலந்துரையாடலின் போது, நாகர்கோயில் பகுதியின் வனவளத் திணைக்களத்தினரால் அபகரிக்கப்பட்ட காணி விவகாரம் பேசப்பட்டது.

நாகர்கோயிலில் பொது மக்களின் காணிகளை வனவளத் திணைக்களத்தினர் எல்லையிட்டு, அந்த பகுதியை கையகப்படுத்தும் வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலங்களை விடுவிப்பது தொடர்பில் 5 வருடங்களின் முன்னரே கலந்துரையாடப் பட்டு, அந்த காணிகளை விடுவிப்பதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், அது இதுவரை நடைமுறைப்படுத்தப்பட ஸ்ரீவில்லை.

இந்த விவகாரம் நேற்று முன்தினம் சுட்டிக்காட்டப்பட்டது.

அப்போது கருத்து தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க - “நாகர்கோயில் பகுதி எனக்கு நன்கு பரிச்சயமான பகுதி. அங்கு பலமுறை வந்துள்ளேன். சமாதான உடன்படிக்கை காலத்திலும் இராணுவ முன்னரணுக்கு வந்திருந்தேன். அதற்கு பின்னரும் வந்திருக்கிறேன். அது காட்டுப் பகுதியல்ல.

மக்கள் இடம்பெயர்ந்ததால் அங்கு மரங்கள் வளர்ந்துள்ளன. காடுகள் வளர்ந்த இடமெல்லாம் வனவளத் திணைக்களத்திற்கு உரியதல்ல. இலங்கையில் 40 வீத காடுகளை பராமரிக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால், அதற்காக மக்களின் வாழிடங்களில் காடு வளர்ந்த இடங்களையெல்லாம் உரிமை கொண்டாட முடியாது.

பலாலியில் இராணுவத்தின் கட்டுப்பாட்டு பகுதிக்குள் மக்கள் இல்லாத இடங்களில் நிறைய பகுதிகளில் காடு வளர்ந்துள்ளது. அதையெல்லாம் வனவளத் திணைக்கத்திற்கு உரியதென எல்லையிடுவீர்களா? வாருங்கள் அங்கு கூட்டிச் செல்கிறேன்“ என தெரிவித்தார். (அ)

# வனவளத் திணைக்களத்தினர் தடுத்துவைத்த லொறி எரிப்பு!

கிளிநொச்சி, ஜன. 17

வனவளத் திணைக் களத்தினரால் தடுத்து வைக்கப்பட் டிருந்த லொறி தீயிட்டு எரிக் கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, பூநகரி பகுதியில் சட்ட விரோதமான முறை யில் காட்டில் உள்ள மரங்களை வெட்டி வேறு பகுதிக்கு கொண்டு செல்ல முற் பட்ட லொறி ஒன்று கைப்பற் றப்பட்டு தடுத்து வைக்கப்பட்டது.



இந்த கைது கடந்த ஒரு வாரத்துக்கு முன்னதாக இடம் பெற்றுள்ளது.

குறித்த வாகனம் பூநகரி வனஜீவராசிகள் திணைக்கள அலுவலகத்தில் தடுத்து வைக்கப்பட்டி ருந்த நிலையில் நேற்று முன் தினம் ஞாயிற் றுக்கிழமை இரவு இனம் தெரியாத நபர்களால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் இடம்பபெற்றபோது வனஜீவராசிகள் அலுவலகத்தில் எவரும் இருக்கவில்லை எனவும், அருகில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் நீர்த்தாங்கி மூலம் தீயை அணைத்தனர் எனவும் கூறப்பட்டது. ஆயினும் வாகனம் முற்றாக எரிந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பூநகரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# வெல்கம-சம்பிக்க அணிகள் கூட்டாக களமிறங்குகின்றன!

கொழும்பு, ஜன. 17

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையிலான 43ஆவது பிரிவும் குமார வெல்கம தலைமையிலான புதிய இலங்கை சுதந்திரக் கட்சியும் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

அதற்கான ஒப்பந்தத்தில் பாட்டலி சம்பிக்க ரணவக்க மற்றும் குமார வெல்கம ஆகியோர் நேற்று கைச்சாத்திட்டனர்.

தமது இரு குழுக்களும் இணைந்து பல உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடவுள்ளதாகவும், ஏனைய சபைகளுக்கான வேட்பாளர்களை சுயேச்சையாக முன்வைப்பதாகவும் பாட்டலி சம்பிக்க ரணவக்க இங்கு தெரிவித்தார்.

‘ஹெலிகொப்டர்’ சின்னத்தில் போட்டியிடும் சுதந்திர மக்கள் கூட்டமைப்புக்கு தாம் வாழ்த்து தெரிவித்ததாகவும் அவர்களுடன்



கலந்துரையாடியதாகவும், எனினும் சில விடயங்களில் இணக்கம் காணமுடியாத காரணத்தால் தனித்து போட்டியிடத் தீர்மானித்ததாகவும் ரணவக்க கூறினார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாட்டை வங்குரோத்து செய்த பொதுஜன பெரமுனவே பொது எதிரியாக இருக்கவேண்டும் என தெரிவித்த அவர், ஏனைய அனைத்து குழுக்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

தனது சக எம்.பி.க்கள் சுதந்திர மக்கள் கூட்டமைப்பில் இருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார். (அ)

கல்வி tv CHANNEL-1

17.01.2023
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

17.01.2023
செவ்வாய்க்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# திருமலை துறைமுகத்தில் இந்தியாவின் போர் கப்பல்

திருமலை, ஜன. 17

இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ் டில்லி கப்பல் நேற்று முன்தினம் காலை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது.

கடற்படை சம்பிரதாயங்களுக்கு அமைய இலங்கை கடற்படை குறித்த கப்பலை வரவேற்றது.

திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்துள்ள யுத்த கப்பலான ஐ.என்.எஸ் டில்லி கப்பல், 163.2 மீற்றர் நீளமுடையது.

390 கடல் அல் பரப்புடைய இந்த கப்பலின் கட்டளை அதிகாரியாக கெப்டன் ஷிருஸ் ஹூசென் அசாத் செயற்படுகின்றார்.

கப்பலின் கட்டளை அதிகாரி மற்றும் கிழக்கு கடற்படை மற்றும் தன்னார்வ கடற்படையின் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் தம்மிக்க குமார ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கிழக்கு கடற்படை தலைமையகத்தில் இடம்பெறவுள்ளது.

ஐ.என்.எஸ் டில்லி கப்பல் இன்று நாட்டிலிருந்து புறப்பட்டு செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# திருமலை, அம்பாறையில் ரிஷாத்தின் கட்சி தனி வழி

அம்பாறை, ஜன. 17

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தனித்து போட்டியிடுவதற்கு தீர்மானித்துள்ளது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஏனைய சில மாவட்டங்களில், ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டிணைந்து போட்டியிடுவதற்கான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மின்சார வசதி இல்லாத மாணவர்களுக்கு 60 சோலார் மின்கலம் வழங்கிய ரோட்டரி!

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு ரோட்டரி கழகம் மட்டு.மேற்கு வலயத்தில் மிகவும் பின்தங்கிய மின்சாரம் இல்லாத 60 மாணவர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் மின் குமிழ்களை வழங்கி வைத்தது.

மட்டக்களப்பு ரோட்டரிக் கழக தலைவர் றோட்டரியன் பி.ரமணதாச தலைமையில் இந்த நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறிஞ்சாக்கேணி பாவற்கொடிச்சேனை உள்ளிட்ட மூன்று கிராமங்களில் மின்சாரமின்றி வாழும் 60 மாணவர்களுக்கு சூரிய ஒளியில் இயங்கும் மின் குமிழ்கள் வழங்கப்பட்டன.



நிகழ்வுகளில் கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பல்புகளை வழங்கினார்.

நிகழ்வில் புதிதாக நியமனம் பெற்ற கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் செல்வி அகிலா விற்கு ரோட்டரி கழகதா தலைவர் ரமணன் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (அ)

# உலருணவு பொதி வழங்கல்



திருமலை, ஜன. 17

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு காப்போம் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் திரு கோணமலையிலுள்ள வயோ திபக் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திருகோணமலை விபுலானந்தா கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

காப்போம் தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் திருமதி எஸ்.நவேந்திரராஜா, திருகோணமலை மகளிர் உதவி அறக்கட்டளைத் தலைவி திருமதி நாகேந்திரன் ஆஷா உள்ளிட்ட காப்போம் தொண்டு நிறுவனத்தின் செயலாளர், பொருளாளர், நிர்வாக உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திருகோணமலையிலுள்ள வறிய வயோதிபமான 60 குடும்பங்களுக்கு தலா 2500 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (அ)



# சேவையாளர்களுக்கு கௌரவம்!

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு ரோட்டரி கழகம் இரண்டு ரோட்டரி சேவையாளர்களை பாராட்டி கௌரவித்தது.

மட்டக்களப்பு ரோட்டரி கழக தலைவர் றோட்டரியன் பி.ரமணதாஸ தலைமையில் பாராட்டு விழா நேற்று முன் தினம் நடைபெற்றது.

சுகாதாரத் துறைக்கு பாரிய பங்களிப்பு செய்து சேவையாற்றிவரும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் டாக்டர் குண.சுகுணன் மற்றும் அண்மையில் கிழக்கு மாகாண மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்ற றோட்டரியன் சண்முகம் தங்கராஜா ஆகியோருக்கு தலைவர் ரமணதாஸ பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். (அ)

# இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளை புனரமைப்பு

அம்பாறை, ஜன. 17

இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு கிளை நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டது.

இந்த கூட்டம் காரைதீவு பிரதான நூலக மண்டபத்தில் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

தமிழரசுக்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்த கூட்டத்தில் புதிய கிளை உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள்.

அதன்படி தலைவராக தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், செயலாளராக கதிர் காமத்தம்பி செல்வ பிரகாஷ், பொருளாளராக கணபதிப்பிள்ளை தட்சணாமூர்த்தி, உப தலைவராக முன்னாள் தவிசாளர் யோ. கோபிகாந்த், உபசெயலாளராக த. சிவகுமார் மற்றும் ஏனைய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டார்கள்.



எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான கூட்டத்தை இன்றும் நாளையும் காரைதீவின் நான்கு வட்டாரங்களிலே நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அத்தோடு கட்சியின் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (அ)



# மெக்சிக்கோவில் புகை பிடிக்க தடை

மெக்சிக்கோ சிற்றி, ஜன. 17

மெக்சிக்கோவில் பொது இடங்களில் புகைப் பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் புகைப் பிடிப்பதை முற்றாக தடை செய்து உலகிலேயே மிக கடுமையான புகையிலை எதிர்ப்புச் சட்டத்தை மெக்சிக்கோ அமுல்படுத்தியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, மெக்சிக்கோவில் பூங்காக்கள், கடற்கரைகள், ஹோட்டல்கள், அலுவலகங்கள் மற்றும் உணவகங்களில் புகைப் பிடிப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் நாட்டில் உள்ள உணவகங்கள் மற்றும் பணியிடங்களுக்கு மட்டுமே இந்த சட்டம் பயன்படுத்தப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புதிய சட்டத்தின் மூலம் புகையிலைப் பொருட்களின் விளம்பரம், விளம்பரம் மற்றும் ஸ்பான்சர்ஷிப் ஆகியவை முற்றாக தடை செய்யப்படுவதுடன், கடைகளில் சிகரெட்டுகளை காட்சிப்படுத்த கூட முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல இலத்தீன் அமெரிக்க நாடுகள் புகை இல்லாத பொது இடங்களை உருவாக்கச் சட்டங்களை இயற்றியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# வடக்கு புர்கினா பாசோவில் 50 பெண்கள் கடத்தப்பட்டனர்

லியோ, ஜன. 17

வடக்கு புர்கினா பாசோவில் ஜிஹாதிகள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களால் சுமார் 50 பெண்கள் கடத்தப்பட்டனர் என உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



கடுமையான உணவுப் பற்றாக் குறையின் காரணமாக, இலைகள் மற்றும் காட்டுப் பழங்களைச் சேகரித்துக்கொண்டிருந்த பெண்களே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் இரண்டு குழுக்களாக அழைத்துச் செல்லப்பட்டதாக அர்பிந்தாவில் வசிப்பவர்கள் தெரிவித்தனர்.

கடத்தல்கள் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடந்தன. சஹேல் பகுதியில் உள்ள அர்பிந்தா, ஜிஹாதி கிளர்ச்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த கடத்தலின்போது தப்பிய மூன்று பெண்கள் குறித்த சுமார் 50 பெண்கள் கடத்தப்பட்டதை அதிகாரிகளிடம் தெரிவித்ததாக ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

உள்ளேயும் வெளியேயும் வீதிகள் ஜிஹாதிகளால் தடுக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருட்கள் குறைவாக இருப்பதால் கடுமையான பசி நிலைமை உள்ளது.

புர்கினா பாசோ முழுவதும் ஒரு தசாப்த கால கிளர்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

இது கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் மக்களை இடம்பெயர வழிவகுத்துள்ளது. இராணுவம் கடந்த ஜனவரியில் அதிகாரத்தைக் கைப்பற்றியது. தாக்குதல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக உறுதியளித்தது, ஆனால் வன்முறை இன்னும் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. (அ)

# 'ஆப்கானிஸ்தானின் அச்சமற்ற சம்பியன்' முன்னாள் பெண் எம்.பி. சுட்டுக்கொலை!

காபூல், ஜன. 17

'ஆப்கானிஸ்தானின் அச்சமற்ற சம்பியன்' என பாராட்டப்பட்ட முன்னாள் பெண் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் அவரது பாதுகாவலர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என ஆப்கானிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் காபூலில் தங்கியிருந்த சில பெண் பாராளுமன்ற உறுப்பினர்களில் 32 வயதான முர்சல் நபிசாதாவும் ஒருவர்.

அவர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்த தாக்குதலில் சுட்டுக்கொல்லப்பட்டார். அவருடன் அவரது பாதுகாவலரும் உயிரிழந்தார். மேலும், அவரது சகோதரரும் இரண்டாவது பாதுகாவலரும் காயமடைந்தனர்.

முன்னாள் சட்டமியற்றுபவர் மரியம் சோலைமான்கில் தனது ருவிட்டர் பக்கத்தில், 'வலிமையான, வெளிப்படையாகப் பேசும் பெண், ஆபத்தின்போதும்கூட, தான் நம்பியதைக் கடைப்பிடித்தார். ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும், அவர் தனது மக்களுக்காக நாட்டிலேயே தங்கிப் போராடத் தேர்ந்தெடுத்தார்' என்று பதிவிட்டார்.



2021 இல் தலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்ததில் இருந்து, பொதுவாழ்வின் அனைத்து பகுதிகளிலிருந்தும் பெண்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

காபூல் பொலிஸ்துறை செய்தித் தொடர்பாளர் காலித் சத்ரான் கூறுகையில், இந்த சம்பவம் குறித்து பாதுகாப்புப் படையினர் தீவிர விசாரணையைத் தொடங்கியுள்ளனர்- என்றார். (அ)



# நேபாளத்தில் துக்க தினம்!

காத்மண்டு, ஜன. 17

நேபாளில் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக, அங்கு நேற்று தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

காத்மண்டுவில் இருந்து சுற்றுலா நகரமான பொக்காரா சர்வதேச விமான நிலையத்துக்கு பயணித்த விமானம் ஒன்று நேற்று முன் தினம் விபத்துக்குள்ளானது.

குறித்த விமானத்தில் 72 பயணிகள் மற்றும் பணிக்குழாமினர் பயணித்திருந்த நிலையில், அவர்கள் அனைவரும் உயிரிழந்தனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்தன.

தொடர்ந்தும் 2 ஆம் நாளாகவும் விபத்து இடம்பெற்ற பகுதியில் தேடுதல் பணிகள் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விமானம் தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன் ஏற்பட்ட தொழிநுட்பக் கோளாறு காரணமாக விமானம் விபத்துக்குள்ளாகி தீப்பற்றுதலுக்கு உள்ளானது.

இந்த நிலையில், கடந்த 3 தசாப்தங்களாக நேபாளில் பல விமான விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன், அதில் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்தும் நேபாளில் நேற்று துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. (அ)

# பிரபஞ்ச அழகி பட்டத்தை கைப்பற்றிய அமெரிக்காவின் ஆர்'போனி கேப்ரியல்!



நியூயோர்க், ஜன. 17

இந்த முறை பிரபஞ்ச அழகி பட்டத்தை அமெரிக்காவின் ஆர்'போனி கப்ரியல் கைப்பற்றி அசத்தினார்.

அமெரிக்காவின் லூசியானாவின் நியூ ஆர்லியன்ஸ் நகரில் 71ஆவது பிரபஞ்ச அழகி போட்டி நடைபெற்றது.

இதில் (மிஸ் யுனிவர்ஸ் 2022) பிரபஞ்ச அழகி 2022 இன் பெயர் அறிவிக்கப்பட்டது.

இந்த முறை பிரபஞ்ச அழகி பட்டத்தை அமெரிக்காவின் ஆர்'போனி கப்ரியல் கைப்பற்றினார். இந்தப் போட்டியில் மொத்தம் 86 இற்கும் மேற்பட்ட பெண்கள் போட்டியிட்டனர்.

வெனிசுலாவின் டயானா சில்வா 2ஆவது இடத்தையும், டொமினிகன் குடியரசின் அமி பெனா 3ஆவது இடத்தையும் பிடித்தனர். இந்தப் போட்டியில் இந்தியா சார்பாக போட்டியிட்ட திவிதா 'சோன் சிரியா' உடையணிந்து வந்து உலகத்தின் கவனத்தை ஈர்த்ததுடன், அவர் 16 ஆவது இடத்தை பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இந்தோனேசியாவில் நேற்று சக்தி வாய்ந்த நில நடுக்கம்!

ஜகார்த்தா, ஜன. 17

பசிபிக் படுகையில் உள்ள எரிமலைகள் மற்றும் பூமத்திய கோடுகளின் வளைவான "ரிங் ஒப் பயர்" மீது இந்தோனேசியா இருப்பதால் அடிக்கடி பூகம்பங்கள் மற்றும் எரிமலை வெடிப்புகளால் பாதிக்கப்படுகிறது.

இந்நிலையில், இந்தோனேசியாவின் மேற்குப் பகுதி யில் நேற்று அதிகாலை கடலுக்கு அடியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 6.0 ரிச்டர் அள வில் பதிவானது.

இந்த நிலநடுக்கம் 48 கிலோமீற்றர் ஆழத்தில் ஆச்சே மாகாணத்தின் கடலோர மாவட்டமான சிங்கில் இருந்து தென்கிழக்கே 48 கிலோமீற்றர் மையமாக இருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்தோனேசியா வின் வானிலை, காலநிலை மற்றும் புவி இயற்பி யல் மையத்தால் சுனாமி எச்சரிக்கை வெளி யிடப்படவில்லை. பொருட்சேதம், உயிரிழப்பு குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.




# இலங்கையுடனான போட்டி இந்தியா சாதனை வெற்றி!

திருவனந்தபுரம், ஜன. 17

இலங்கைக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 317 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இந்திய அணிக்காக துடுப்பாட்டத்தில் விராட் கோலி மற்றும் ஷூப்மன் கில் சதம் விளாசினர்.

இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடரில் விளையாடியது.

ஒருநாள் தொடரின் கடைசிப் போட்டி நேற்று முன்தினம் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் அமைந்துள்ள கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இந்திய அணிக்காக அணித் தலைவர் ரோஹித் மற்றும் கில் தொடக்கம் கொடுத்தனர். ரோஹித், 42 ஓட்டங்களில் வெளியேறினார். இந்திய அணி முதல் விக்கெட்டுக்கு 95 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தது. பின்னர் வந்த கோலியுடன் இணைந்து 131 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் கில். அவர் 97 பந்துகளில் 116 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மறுபக்கம் கோலி இறுதி வரை ஆட்டமிழக்காமல் 110 பந்துகளில் 166 ஓட்டங்களை குவித்தார். இதில் 13 பௌண்ட்ரிகள், 8 சிக்ஸர்கள் அடங்கும். 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 390 ஓட்டங்களைக் குவித்தது இந்தியா. 391 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை இலங்கை விரட்டியது.

அந்த அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. 22 ஓவர்களில் வெறும் 73 ஓட்டங்கள் எடுத்து அனைத்து விக்கெட்களையும் இழந்து இந்தியாவிடம் சரண் அடைந்தது இலங்கை.

இதனால், இந்தியா 317 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்திய அணி சார்பில் 10 ஓவர்கள் வீசி, 32 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 4 விக்கெட்களை கைப்பற்றி அசத்தி இருந்தார் முகமது சிராஜ். ஷமி மற்றும் குல்தீப் யாதவ் தலா 2 விக்கெட்களை வீழ்த்தியிருந்தனர்.

இந்த வெற்றியின் மூலம் ஒருநாள் கிரிக்கெட் அரங்கில் 300 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற முதல் அணி என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதையும், தொடரின் நாயகன் விருதையும் கோலி பெற்றார். அவர் 2 சதங்களை இந்த தொடரில் பதிவு செய்துள்ளார்.

(ஐ)

# அதிக ஓட்டங்கள் வரிசை கோலி 5ஆவது இடத்தில்!

சென்னை, ஜன. 17

ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த துடுப்பாட்ட 5ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளார் இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி. திருவனந்தபுரத்தில் நேற்றுமுன்தினம் இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்ற ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 110 பந்துகளில் 166 ஓட்டங்கள் எடுத்தார்.



இந்தப் போட்டியில்தான் ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் முதல் ஐந்து வீரர்களில் ஒருவராக அவர் இணைந்தார்.

கடந்த 2008 முதல் இந்திய அணிக்காக சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் கோலி விளையாடி வருகிறார். மொத்தம் 259 ஆட்டங்களில் 12,754 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 64 அரைச்சதங்கள், 46 சதங்கள் அடங்கும். திருவனந்தபுரத்தில் இலங்கைக்கு எதிராக 63 ஓட்டங்கள் கடந்த போது இந்த மைல்கல்லை அவர் எட்டினார்.

முன்னதாக, ஐந்தாவது இடத்தில் 12,650 ஓட்டங்களுடன் இலங்கை அணியின் முன்னாள் வீரர் ஜெயவர்த்தன இருந்தார். அவரைதான் கோலி இப்போது முந்தியுள்ளார். இது தவிர, சொந்த மண்ணில் ஒருநாள் கிரிக்கெட்டில் 21 சதங்கள், இலங்கைக்கு எதிராக ஒருநாள் கிரிக்கெட்டில் 10 சதங்கள் போன்ற சாதனைகளை அவர் படைத்துள்ளார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள்

சச்சின் டெண்டுல்கர் - 18, 426 ஓட்டங்கள்
குமார் சங்ககாரா - 14, 234 ஓட்டங்கள்
றிக்கி பொண்டிங் - 13,704 ஓட்டங்கள்
சனத் ஜெயசூர்யா - 13, 430 ஓட்டங்கள்
விராட் கோலி - 12, 651 ஓட்டங்கள். (ஐ)

# இந்திய அணி சாதனை



திருவனந்தபுரம், ஜன. 17

இலங்கை கிரிக்கெட் அணிக்கு எதிராக திருவனந்தபுரத்தில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் 317 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆடவர் ஒருநாள் கிரிக்கெட்டில் 300 இற்கு அதிகமான ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற முதல் அணி என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

இந்த போட்டியில் கோலி மற்றும் ஷூப்மன் கில் என இருவரும் சதம் விளாசி அசத்தினர். இதே போல சிராஜ் அபாரமாக பந்து வீசி 4 விக்கெட்கள் கைப்பற்றி அசத்தினார்.

அதன் மூலம் இந்திய அணி இந்த தரமான வெற்றியை பெற்றது. தொடரையும் 3-0 என்ற கணக்கில் வென்றது. இந்த ஆண்டு ஒருநாள் உலகக் கோப்பை தொடர் நடைபெற உள்ள நிலையில் இந்திய அணியின் இந்த அபார ஆட்டம் ரசிகர்களை வெகுவாக ஈர்த்துள்ளது.

அதிக ஓட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

இந்தியா - இலங்கை - 317 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி - 2023

நியூசிலாந்து - அயர்லாந்து - 290 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து வெற்றி - 2008

அவுஸ்திரேலியா- ஆப்கானிஸ்தான் - 275 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸி. வெற்றி - 2015

தென்னாபிரிக்கா - சிம்பாப்வே - 272 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி - 2010

தென்னாபிரிக்கா - இலங்கை - 258 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்கா வெற்றி - 2012

இந்தியா - பெர்முடா - 257 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா வெற்றி - 2007



# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் ஸ்வியாரெக் வெற்றி!

மெல்பர்ன், ஜன. 17

முதல்நிலை வீராங்கனை இகா ஸ்வியாரெக் முதல் சுற்றில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் நேற்று மெல்பர்னில் தொடங்கியது.

இதில், முதல் சுற்றில் ஸ்வியாரெக் ஜேர்மனியின் நிமெல்லரை எதிர்கொண்டார். இதில், ஸ்வியாரெக் 6 - 4, 7 - 5 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

இதேபோன்று, விக்ரோறியா அசரென்கா 6 - 4, 7 -6 (7-3) என்ற செற் கணக்கில் கெனினை வெற்றி கொண்டார். இதேபோல பிரிட்டனின் எம்மா ரடுகானு 6 - 3, 6 -2 என்ற செற் கணக்கில் ஜேர்மனியின் கோர்பச்சேயை எதிர்கொண்டார். (ஐ)

# ஆஸி. ஓப்பன் ரென்னிஸ் ரபேல் நடால் வெற்றி!

மெல்பர்ன், ஜன. 17

ஜாக் டிராபர் - ரபெல் நடாலுக்கு இடையிலான ஆட்டம் மூன்றரை மணி நேரம் நீடித்தது.

கிராண்ட்ஸ்லம் பட்டியலில் முதலிடத்தில் இருக்கும் ஸ்பெயினின் ரபெல் நடாலை (22 கிராண்ட்ஸ்லாம்) சமன் செய்து விடுவார். நடப்பு சம்பியனான ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் தனது முதல் சுற்றில் இங்கிலாந்தின் ஜாக் டிராபரை நேற்று சந்தித்தார். ரபேல் நடாலுக்கு கடுமையான போட்டி கொடுத்தார் ஜாக் டிராபர்.

சுமார், மூன்றரை மணி நேரம் நீடித்த இந்த மோதலில் ரபெல் நடால் 7-5, 2-6, 6-4, 6-1 என்ற புள்ளி வித்தியாசத்தில் போராடி வெற்றார். இந்த வெற்றியின் மூலம் அவர் 2ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார். (ஐ)



# சீன அதிகாரிகள் வருகை குறித்து வடக்கு-கிழக்கு மக்கள் கரிசனை!

## இந்திய ஊடகமொன்று தகவல்

**கொழும்பு, ஜன. 17**

**தமது வாழ்விடப் பகுதிகளுக்கு அண்மைக் காலமாக சீன அதிகாரிகள் வந்து செல்வது தொடர்பில் வடக்கு - கிழக்கின் தமிழ் மற்றும் முஸ்லிம்கள் கரிசனைக் கொண்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

இலங்கையின் ஊடகம் ஒன்றை கோடிட்டு இந்திய ஊடகம் ஒன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள சீனத் தூதரகத்தின் பொறுப்பதிகாரி ஹூ வே தலைமையிலான குழு, இந்த ஜனவரியில் யாழ்ப்பாணம் சென்றிருந்தது.

அங்கு அவர்கள், நிவாரணம் மற்றும் பாடசாலை உபகரணங்களை விநியோகித்தனர்.

ஏற்கனவே சீன மக்கள் படையினரின் பிரசன்னம், இலங்கையின் வடக்கில் உள்ளதாகவும், இது தமது பாதுகாப்புக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் தமிழ் நாட்டு பாதுகாப்புத் துறை தெரிவித்திருந்தது.

சீன மக்கள் பாதுகாப்புப் படையினர், இலங்கையின் வடக்கில் இருந்து அதி நவீன கருவிகளின் ஊடாக தமிழகத்தின் கரையோரப்பகுதிகளை அவதானித்து வருவதாகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் சீன நாட்டினர், வடக்கில் கடல் அட்டை உற்பத்தி என்ற அடிப்படையில், முல்லைத்தீவு, பருத்தித்துறை, அனலைதீவு, மீசாலை மற்றும் சாவகச்சேரி போன்ற இடங்களில் நடமாடுகின்றனர்.

இது தமிழ் மக்கள் மத்தியில் இடைவெளியை ஏற்படுத்தி, இந்தியாவின் செல்வாக்கை குறைக்கும் செயற்பாடாகவும் மக்கள் மத்தியில் கருதப்படுகிறது என்றும் கொழும்பின் ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. (அ)



# விஜயகலாவின் இல்லத்துக்கு ஜனாதிபதி ரணில் விஜயம்!

*யாழ்ப்பாணம், ஜன. 17*

யாழ்ப்பாணத்திற்கு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான விஜயகலா மகேஸ்வரனின் இல்லத்திற்கும் விஜயம் செய்தார்.

கந்தர்மடம் பலாலி வீதியில் உள்ள விஜயகலா மகேஸ்வரனின் இல்லத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதிக்கு தமிழ் கலாசார முறைப்படி ஆராத்தி எடுத்து வரவேற்றதோடு இந்து குருமார் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்து கௌரவித்து ஜனாதிபதிக்கு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கினர்.

தொடர்ந்து யாழ். மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்கள், புத்திஜீவிகள், விரிவுரையாளர்களுடன் கலந்துரையாடியதோடு எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தார். (அ)

# இலங்கை மருத்துவர் சங்கத்துக்கு புதிய தலைவர் வின்யா ஆரியரத்ன

*கொழும்பு, ஜன. 17*

இலங்கை மருத்துவர் சங்கத்தின் 129 ஆவது தலைவராக விசேட வைத்திய நிபுணர் கலாநிதி வின்யா ஆரியரத்ன தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் தேர்தல் நேற்று முன் தினம் நடைபெற்றபோதே அவர் தெரிவு செய்யப்பட்டார்.

வெளிநாடு செல்லும் மற்றும் ஓய்வு பெறும் வைத்தியர்களின் சரியான தரவுகளை பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் உடனடியாக அமுல் படுத்தப்படும் என இலங்கை மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

சரியான தரவுகள் இல்லாமை பாரிய பிரச்னையாக உள்ளதாக சங்கத்தின் புதிய தலைவராக பதவியேற்ற வைத்திய நிபுணர் வின்யா ஆரியரத்ன தெரிவித்தார். (அ)

# யாழ்ப்பாணத்தில் அதிகரிக்கிறது டெங்கு நோயாளர் எண்ணிக்கை!

*கொழும்பு, ஜன. 17*

இந்த வருடத்தின் முதல் இரண்டு வாரங்களில் 4 ஆயிரத்து 178 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், நோயாளர்களின் எண்ணிக்கை 871 எனவும் குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், கம்பஹா மாவட்டத்தில் 846 நோயாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 224 நோயாளர்களும், கண்டியில் 190 நோயாளர்களும் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் பதிவாகியுள்ளனர்.

அத்துடன், இந்த மாதத்தின் முதல் இரண்டு வாரங்களுக்குள் யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் 255 நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்

*கொழும்பு, ஜன. 17*



புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக இந்த புதிய தேசிய பாதுகாப்புச் சட்டமூலம் கொண்டுவரப்படும் என அவர் குறிப்பிட்டார்.

புதிய சட்டமூலம் அடுத்த வாரத்துக்குள் அமைச்சரவையில் முன்வைக்கும் நோக்கில் அமைச்சரவைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதாக அவர் கூறினார்.

மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி நெரின் புள்ளே மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி நளின் டி இந்திரதிஸ்ஸ ஆகியோரின் இணை தலைமையுடன் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவினால் தேசிய பாதுகாப்புச் சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (அ)

# தலவாக்கலையில் தீ விபத்து; 12 வீடுகள் எரிவடைந்து சேதம்





*கொழும்பு, ஜன. 17*

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை லோகி தோட்டத்தின் மிடில்டன் பிரிவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட தீ விபத்தால் 12 அறைகளைக்கொண்ட லயன் குடியிருப்பில் 7 வீடுகள் முழுமையாக தீக்கிரையாகியுள்ளன.

மேலும், 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. இதனால் 12 குடும்பங்களை சேர்ந்த 49 இற்கும் மேற்பட்டோர் நிர்க்கதியாகியுள்ளனர்.

குறித்த லயன் குடியிருப்பில் நேற்றுமுன்தினம் திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மக்கள் கூச்சலிட்டுக்கொண்டு வெளியில் வந்தனர்.

அதற்குள் தீ வேகமாக பரவியது. பரவிய தீயை அதே தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பிரதேசவாசிகள், தலவாக்கலை பொலிஸாருடன் இணைந்து சுமார் மூன்று மணித்தியாலயங்களுக்கு பிறகு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்து ஏற்பட்ட போது வீடுகளில் வசித்த பெருந்தொகையானோர் தோட்டத்தில் நடைபெற்ற தைப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்ததால் தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த தீயினால் தோட்டத் தொழிலாளர்களின் தனிப்பட்ட உடைமைகளும், வீடுகளில் வசித்த பிள்ளைகளின் பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்களும் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன.

தீயினால் பாதிக்கப்பட்ட 12 குடும்பங்களில் 3 குடும்பங்கள் மாத்திரம் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 9 குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாக குடியமர்த்தப்பட்டுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க தலவாக்கலை பெருந்தோட்ட கம்பனி மற்றும் பிரதேசவாசிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் இதுவரை தெரியவில்லை என தெரிவிக்கும் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பொலிஸ் உத்தியோகத்தரும் நண்பரும் வெட்டிக் கொலை!

*கொழும்பு, ஜன. 17*

பொலிஸ் விசேட அதிரடிப் படையில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரும் அவரது நண்பரும் நேற்று முன் தினம் இரவு இருவரால் கத்தியால் குத்தி கொல்லப்பட்டுள்ளதாக கிரியுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த நாற்பத்தொரு வயதுடைய இஷார மகேஷ் பண்டார என்ற பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் அவரது நண்பரான 38 வயதுடைய கசுன் புஷ்பகுமார ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குருநாகல் ரத்கல்லையில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமில் பொலிஸ் சார்ஜன்ட் பணிபுரிவதாக கிரியுல்ல பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இருவரையும் வாள்களால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலைமறைவான இரு சந்தேக நபர்களை கைது செய்ய கிரியுல்ல பொலிஸ் அதிகாரிகள் குழு விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## 13 அமுலானால்...

அத்துடன், 13இன் மூலம் பிரிவினைவாத கொள்கையுடைய அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமே தவிர, தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள உண்மை பிரச்னைகளுக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது. வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண 1957 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏழ்மை ஒழிப்பு சட்டத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் அதில் கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய பொங்கல் விழா நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ஓரிரு வருடங்களில் 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தார்.

இந்த நிலையிலேயே விமல் வீரவன்ஸ மேற்படி கடிதத்தை அனுப்பியுள்ளார். அதில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாக வடக்கு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றினால் குறுகிய காலத்தில் நாடு இரண்டாக பிளவடையும். 13 ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதால் வடக்கின் பிரிவினைவாத, சாதி அடிப்படையிலான அரசியல் தலைவர்களின் நோக்கம் நிறைவேறுமே தவிர தமிழ் மக்களின் உண்மை பிரச்னைக்கு ஒருபோதும் தீர்வு கிடைக்காது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு மற்றும் பிரிவினைவாத அரசியல் கட்சிகள் அடையாளப்படுத்தும் இன அடிப்படையிலான பிரச்னை, நாங்கள் அடையாளப்படுத்தும் சமூக மற்றும் அரசியல் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது அவசியமாகும்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் மனங்களை வெல்ல உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது உண்மை. தமிழ் மக்களின் அடிப்படையில் சர்வகட்சி தலைவர் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் பிரிவினைவாத அரசியல் கட்சிகளின் நிபந்தனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

சர்வதேச காலநிலை தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் 2002 ஆம் ஆண்டு முன்வைத்த கொள்கையில் போர் நிறுத்த ஒப்பந்தம், வட, கிழக்கு மாகாண சபையை தற்காலிக அரசாங்கமாக மாற்றியமைக்கும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அப்போதைய பிரதமராக பதவி வகித்த நீங்கள் (ஜனாதிபதி) அதற்கு இணக்கம் தெரிவித்தீர்கள். அதற்கமைய 'ஒஸ்லோ ஒப்பந்தம்' கைச்சாத்திடப்பட்டது. அதனை தொடர்ந்து 2013ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள், சர்வதேச பிரிவினைவாத அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களை ஒன்றிணைத்து சிங்கப்பூர் நாட்டில் பேச்சில் ஈடுபட்டதுடன் ஒருசில தீர்மானங்களும் எடுக்கப்பட்டது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவில்லை. விடுதலை புலிகள் அமைப்பின் சந்தேகநபர்களை விடுதலை செய்வதன் ஊடாக தமிழ் மக்களின் நன்மதிப்பை பெற்றுக்கொள்ளல், இராணுவ முகாம் மற்றும் அதனை அண்மித்த காணிகளை விடுவித்தல், மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான 'எல்' வலய காணிகளை பிரதேச செயலகம் ஊடாக விடுவித்தல், காணிக் கொள்கையில் எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு மாத்திரம் காணிகளை வழங்கும் திட்டத்தை வகுத்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னெடுக்க விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. காணாமல் போனார் அலுவலகம் சட்டத்தின் ஊடாக இயற்றப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் உருவாக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் சர்வதேச தலையீடு தென்னாபிரிக்காவில் வெளிப்படையாகக் காணப்படுவதை அறிய முடிகிறது.

2002 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிறைவேற்ற முடியாத விடயங்களை 2023 ஆம் ஆண்டு நிறைவேற்ற முயற்சிப்பது நாட்டின் அரசியல் மற்றும் நிர்வாக கட்டமைப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும். நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பின்னணியில் மக்களை திசைதிருப்பி நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளை முன்னெடுக்க முயற்சிக்கிறீர்கள் என்பதை நன்கு அறிவோம். பிரிவினைவாதத்தில் இருந்து நாட்டை பாதுகாத்து வடக்கு மக்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்கும் வகையில் 10 பிரதான யோசனைகளை முன்வைக்கிறோம்.

இராச்சியத்தின் நிறைவேற்று அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்களுக்கு விரிவுப்படுத்தி அதற்கு இணையாக மக்கள் சபையை உருவாக்கி அரச செயல்பாடுகளில் மக்களை இணைக்க வேண்டும். நிறைவேற்று அதிகாரத்தை வினைத்திறனான முறையில் செயல்படுத்தும் வகையில் உள்ளூராட்சிமன்ற பிரதானிகளை உள்ளடக்கிய வகையில் உள்ளூராட்சி அபிவிருத்தி சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்குள் நிறைவேற்று அதிகாரத்தை செயற்படுத்துவதற்காக மத்திய அரசாங்கத்தின் பிரதி அமைச்சரின் அதிகாரத்துடன் குறைந்தளவிலான அமைச்சரவை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் அவர்களுக்கு விசேட சலுகைகள் ஏதும் வழங்க கூடாது.

நாட்டின் சகல இனங்களின் தேசியத்துவம் மதிக்கப்படுவதுடன், மதம் மற்றும் மொழி அடிப்படையில் வேறுபாடுகள் காண்பிக்க கூடாது. வடக்கு,கிழக்கு மாகாண மக்களின் குறிப்பாக தமிழ் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் 1957 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏழ்மை ஒழிப்பு சட்டத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும்.

பிரிவினைவாதம் மற்றும் மதவாதத்தை அடிப்படையாக கொண்ட செயல்பாடுகளை தடுக்கும் வகையில் புதிய பாதுகாப்பு சட்டம் உருவாக்கப்பட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மீளகுடியமர்த்தல், ஏழ்மை ஒழிப்பு ஆகியவற்றுக்காக விசேட நிதியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து சந்தேக நபர்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது புனர்வாழ்வளிக்கப்பட்டு அவர்களை முழுமையாக விடுதலை செய்ய வேண்டும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக இராணுவத்தினர் மீது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

## யாழ்.மாவட்ட...

அண்மையில், மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய அவர் தற்போது யாழ்ப்பாணம் மாவட்ட செயலராக நியமிக்கப்படவுள்ளார்.

முன்னர், யாழ். மாவட்ட அரச அதிபராக இருந்த க. மகேசன் கடந்த முதலாம் திகதி முதல் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக பதவி உயர்வு பெற்று சென்றிருந்தார். இதையடுத்து அந்தப் பதவி வறிதாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வசந்தவை விடுவிக்க கோரிக்கை

கொழும்பு, ஜன. 17

இலங்கை அரசாங்கம் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயை விடுவிக்குமாறு வலியுறுத்தி ஏழு சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

2022 ஒகஸ்ட் 8 ம் திகதி கைதுசெய்யப்பட்ட மாணவர் செயல்பாட்டாளர் வசந்த முதலிகேயை தன்னிச்சையாக தடுத்துவைத்திருப்பதை இலங்கை அரசாங்கம் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரவேண்டுமஎன்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.

## பட்டா...

இதில், மாவைகலட்டியை சேர்ந்த 27 வயதான தா. தினேஷ் என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார்.

விபத்தையடுத்து பட்டா வாகனத்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 20லட்சம்...

61 ஆயிரத்து 600 மெற்றிக் தொன் நெல்லை மாவட்ட செயலாளர்கள் - பிரதேச செயலாளர்கள் ஊடாக சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களின் உதவியுடன் கொள்வனவு செய்யவும் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

## பல்கலை...

பிரதான வீதியை மறித்திருந்தனர். இதனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் மெரைன் டிரைவ் வீதியில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

150 நாட்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேயை விடுவிக்குமாறும் பயங்கரவாத தடைச் சட்டத்தை செல்லுபடியற்றதாக்குமாறும் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் யூனியன் பிளேஸ் ஊடாக காலி முகத்திடலுக்குள் பிரவேசிப்பதற்கு நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கூட்டணியில்...

சின்னத்தில் உள்ளூராட்சி தேர்தலில் சுதந்திரக் கட்சி போட்டியிடாது என்று அந்தக் கட்சியின் ஊடக செயலாளர் வீரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்புமனுப் பட்டியலைத் தயாரிக் கும் வேலையில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் ஆளுநருமான மறைந்த றெஜி னோல்ட் கூரே தமக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு உள்ளாகி மாரடைப் பால் அவர் உயிரிழந்தார். கூரேயின் அகால மரணம் சுதந்திர கட்சியின் வேட்புமனு பட்டியலை தயாரிக்கும் போது கூட்டணியினர் அவருக்கு பிரயோகித்த அழுத்தங்கள் - அச்சு றுத்தல்களே காரணமாகும் என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மேலும், "வேட்பாளர் பட்டிய லில் அவர்களுக்கு 50 வீதம் மற்றும் 60வீதம் என்று அவர்கள் கோரினர், இறுதியாக முழுவதையும் அவர்க ளுக்கு வழங்கவும், தனியாக தேர்த லுக்கு செல்லவும் முடிவு செய்தோம். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை பல வீனப்படுத்தும் சதியும் இருந்ததால் அது எமக்கு சிறந்த தீர்வாகும். சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை குழிதோண்டி புதைக்கும் நடவடிக் கையில் சிலர் ஈடுபட் டுள்ளனர்" என்றும் சொன்னார்.

## காணி...

மேலும், எந்த காலப்பகுதிக்குள் எந்த இடங்களில் உள்ள காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி கூறவில்லை. மாறாக 108 ஏக்கர் காணி உடனடியாக விடுவிக்கப்படலாம் என்றே கூறினார்.

உடனடியாக விடுவிக்கப்படலாம் என நீண்டகாலமாகவே கூறிவருகிறார்கள். ஆனால், இன்னும் விடுவிக்கப்படவில்லை. இதனாலேயே யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஜனாதிபதியுடனான கலந்துரையாடல் விடயங்கள் தொடர்பாக எங்களுக்கு நம்பிக்கை இல்லை - என்றார். (ஐ)

## விக்கியுடன்..

கட்சியிலேயே இணைந்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்ள தமிழ் மக்கள் கூட்டணி பேச்சு நடத்தியது. எனினும், பின்னர் கூட்டமைப்புடன் சேராமல் அந்தக் கட்சி வெளியேறியது.

இந்நிலையில், தனித்து தேர்தலை சந்திக்கத் தயாராகி வரும் நிலையில் தமிழ் மக்கள் கூட்டணியுடன் மீண்டும் அனந்தி சசிதரன் கூட்டு சேர்ந்துள்ளார். இது அந்தக் கட்சியின் வட்டாரங்கள் மூலம் அறிய வந்தது.

எனினும், இந்தக் கூட்டணி தொடர்பாக இரு தரப்பாரும் உத்தியோக பூர்வமாக எந்த அறிவிப்பையும் நேற்று வரை விடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையின்...

பிரதியமைச்சருமான சென் ஸோ தெரிவித்தார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20ஆவது மாநாடு தொடர்பில் தெளிவுபடுத்தும் நிகழ்வு நேற்று ஷங்கரிலா ஹோட்டலில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

மேலும், சீனக் கம்னியூஸ்ட் கட்சியின் மாநாட்டில் எதிர்கால உலகை எவ்வாறு கட்டியமைப்பது என்பது தொடர்பில் அந்தக் கட்சியின் செயலா ளர் நாயகமாக இருக்கின்ற ஷி ஜின்பிங் தனது இலக்குகளை வெளிப்படுத்தியுள்ளார்.

உலகளாவிய பொருளாதாரத்தை வளர்ச்சி பாதையில் இட்டுச் செல்வதானது, எமது அயல் மற்றும் பிராந்திய நாடுகளின் வளர்ச்சிக்கு துணையாக இருக்கும். மக்களுடன் மக்கள் என்ற மூலோபாயத்தின் மூலமாக அனைத்துச் சமூகங்களும் முகங்கொடுக்கும் சவால்களிலிருந்து வெற்றி பெறமுடியும்.

ஒரே பட்டி மற்றும் பாதை முன்முயற்சியானது, 149 நாடுகளின் பங்களிப்புடன் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் பங்கேற்பது அந்நாடுகளில் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கு பெருமளவில் நன்மைகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

இந்தத் திட்டத்தில் இலங்கை பங்கேற்றதால் அம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகம் ஆகியவை மேம்பாட்டைக் கண்டுள்ளன. அதனை சிறந்த உதாரணங்களாக கூற முடியும். மேலும், ஒரேபட்டி மற்றும் ஒரேபாதை முன்முயற்சியானது, உள்நாட்டின் பெரும் மேம்பாட்டுக்கு அடிப்படையாக அமைவதோடு, சர்வதேச கூட்டாண்மை விருத்திக்கும் வித்திடுவதாக உள்ளது.

பொது இலக்குகளுடன் சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுத்தல், பூகோள பாதுகாப்பு முன்முயற்சி, பூகோள வர்த்தக முன்முயற்சி ஆகியவற்றை உலக நாடுகளில் நல்லாட்சி பண்புகளை உறுதிப்படுத்துவதற்கான சரியான முறையில் வழி காட்டுவதற்கும் சீனா தயாராக உள்ளது.

சீன கம்னியூஸ்ட் கட்சியானது, இலங்கையின் எந்த அரசியல் கட்சியுடனும் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராகவுள்ளது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# புதிய விடியல் உதைபந்தாட்டம் சம்பியனானது சென். மேரிஸ்!




யாழ்ப்பாணம், ஜன. 17

இறுதிவரை பரபரப்பை ஏற்படுத்திய புதிய விடியல் உதைபந்தாட்டப் போட்டியில் சமநிலை தவிர்ப்பு உதையில் வெற்றி பெற்று வெற்றிக் கிண்ணத்தையும் 10 இலட்சம் ரூபாய் பணப் பரிசையும் நாவாந்துறை சென். மேரிஸ் அணி கைப்பற்றியது.

டான் தொலைக்காட்சி குழுமம் நிப்பொன் அனுசரணையில் 8ஆவது ஆண்டாக புதிய விடியல் உதைபந்தாட்ட தொடரை நடத்தியது. யாழ்ப்பாணம் லீக் இந்தத் தொடரை ஒருங்கிணைத்து நடத்தியது.

யாழ். துரையப்பா பொது விளையாட்டரங்கில் நடந்த இந்தப் போட்டியின் இறுதியாட்டத்துக்கு நாவாந்துறை சென். மேரிஸ், சென். நீக்கிலஸ் அணிகள் தகுதிபெற்றன. நேற்று மாலை 3.30 மணிக்கு மைதானம் நிறைந்த ரசிகர்களுடன் போட்டி ஆரம்பமானது.

போட்டியின் ஆரம்பத்தில் அசத்தலாக ஆடிய சென். நீக்கிலஸ் அணி கோல் ஒன்றை அடித்து முன்னிலை பெற்றது. முதல் பாதி ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்களே இருக்கையில் சென். மேரிஸ் அணி அதிரடியாக கோல் ஒன்றை போட்டது. இதனால், முதல் பாதி ஆட்டம் நிறைவடைந்தபோது 1 - 1 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலை வகித்தன.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமான சில நிமிடங்களிலேயே சென். மேரிஸ் அணி தனது இரண்டாவது கோலை பதிவு செய்து முன்னிலை பெற்றது. இதைத் தொடர்ந்து அந் அணி தற்காப்பில் கவனம் செலுத்தியது.

ஆனாலும், சற்றும் சளைக்காத சென். நீக்கிலஸ் அணி அரைமணி நேரத்தில் பதில் கோலை அடித்தது. இதைத் தொடர்ந்து போட்டி நிறைவடையும் வரை இரு வீரர்களும் எவ்வளவோ முயன்றும் கோல் எதையும் அடிக்க முடியவில்லை.

இதையடுத்து சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது. முதல் சமநிலை தவிர்ப்பு உதையில் 4 - 4 என்ற கோல் கணக்கில் இரு அணிகளும் சமநிலை வகித்தன. இரண்டாவது வாய்ப்பில் 2 - 1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது நாவந்துறை சென். மேரிஸ் அணி.

வெற்றி பெற்ற சென். மேரிஸ் அணிக்கு வெற்றிக் கிண்ணத்துடன் 10 இலட்சம் ரூபாய் பணப் பரிசு வழங்கப்பட்டது. இரண்டாமிடத்தைப் பெற்ற சென். நீக்கிலஸ் அணிக்கு 4 இலட்சம் ரூபாய் பணப்பரிசு வழங்கப்பட்டது.

தொடரில் சிறந்த கோல் காப்பாளராக சென். மேரிஸ் அணியின் சிந்துஜன், சிறந்த வீரராக சென். நீக்கிலஸ் அணியின் ஜெரோம், சிறந்த கோல் அடிப்பாளராக சென். நீக்கிலஸ் அணியின் டெனோசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு பணப்பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், விருந்தினர்களாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கே. பி. எம். குணரத்ன, யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் டி. பி. எஸ். என். போதொட்ட, நிப்பொன் பெயின்ற் பிராந்திய விற்பனை முகாமையாளர் மகேந்திரன் பெருமாள், டான் தொலைக்காட்சி குழுமத் தலைவர் எஸ். எஸ். குகநாதன், டான் தொலைக்காட்சி குழுமத்தின் பணிப்பாளர் தே. ஜொனி ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)





சிறந்த வீரருக்கான விருது


இரண்டாம் இடம்பெற்ற சென். நீக்கிலஸ் அணி


சிறந்த கோல் அடிப்பாளர்


படங்கள் : லி.ஜெகன்



சிறந்த கோல் காப்பாளர்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.